DEVELOPMENT LOTTERY
Enriching Your Life

சவால்களை எதிர்கொண்டு
எழுந்திடும் ஓர் தேசத்தை நோக்கி

அபிவிருத்தி லொத்தர் சபை
ஆண்டறிக்கை 2020





மிகப் பாரிய வெற்றியினைக் கொண்டதொரு ஆண்டாக மாற்றியமைத்து இலங்கை மக்களின் வாழ்க்கை மீது நிலைபேறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நாம் உயர் கல்விக்கான வாய்ப்புகளையும் உருவாக்கி அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையை உயர்த்துவதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளோம்.

வெற்றியை நோக்கி பயணம் செய்து எமது புதிய வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு புத்தாக்க தகவல் தொழில்நுட்பங்களின் அடிப்படைகளை அறிமுகப்படுத்துவதற்கு நாம் கடப்பாடு உடையவர்களாவோம்.

உள்ளடக்கம்

நிறுவனம் பற்றிய தகவல்கள் 04
எமது தொலைநோக்கு மற்றும் பணி 05
எனது வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான பார்வை 06
முக்கியமான திருப்புமுனைகள் 08
முக்கியமான நிதிசார் தகவல்கள் 10
தலைவரின் செய்தி மற்றும் முன்னேற்ற அறிக்கை - 2020 12
பணிப்பாளர் சபையின் மீளாய்வு 14
பணிப்பாளர் சபை - 2020 15
தற்போதைய பணிப்பாளர் சபை 15
முகாமைத்துவக் குழு 16
கனிஷ்ட மட்டத்திலான முகாமையாளர்கள் 17
தொழிற்பாட்டு மீளாய்வு 18
உற்பத்திகளின் தொகுப்பு பற்றிய மேலோட்டமான பகுப்பாய்வு 20
நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை 27
நிறுவனத்தின் ஆளுகை 32
இடர்வரு நிலை பற்றிய முகாமைத்துவ அறிக்கை 34
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை 35

நிதிசார் அறிக்கை

சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 38
கணக்காய்வு அறிக்கை - 2020 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் 50
விரிவான வருமானக் கூற்று 60
நிதி நிலைக் கூற்று 61
காசுப் பாய்வுக் கூற்று 62
உரிமைப் பங்குகளின் மாற்றம் பற்றிய கூற்று 63
கணக்கீட்டு கொள்கைகள் 64
பிரிவுசார் அறிக்கை 70
இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள் 72
பத்தாண்டு கால பொழிப்பு 84

நிறுவனத்தின் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்
அபிவிருத்தி லொத்தர் சபை

சட்ட வடிவம்
இச்சபை 1997 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் எனும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்ட திகதி
1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி

அலுவலகத்தின் பதிவு முகவரி
இல. 356 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

தொலைபேசி இலக்கம
0112 333 546-8, 0114 824 824

தொலைநகல் இலக்கம்
0112 333 545

மின்னஞ்சல் முகவரி
info@dlb.lk

இணையத்தளம்
www.dlb.lk

வரி அடையாள இலக்கம்
409089844

தற்போதைய பணிப்பாளர் சபை
திரு வீ.பீ.கே. அனுஷ பெல்பிட்ட - தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

திருமதி.ஜே.எம். பத்ரானி ஜயவர்தன - பணிப்பாளர்
திரு. ரவிந்ர ஜே. விமலவீர - பணிப்பாளர்
திருமதி ஜெனட் ஜயவர்தன - சட்டத்தரணி - பணிப்பாளர்
திருமதி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி - பணிப்பாளர்

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்
மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி,
ஹட்டன் நெஷனல் வங்கி

தொலைநோக்கு

அதிர்ஷ்டத்தை தோற்றுவிக்கும் இலங்கையின் முன்னணி அரசு நிறுவனமாக மாற்றமடைதல்

பணி

பங்காளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விடயத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நம்பகத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதுடன் சிறப்புத் தன்மைகளை பேணிவருவ அதேவேளை நவீன மற்றும் கவர்ச்சிமிக்க லொத்தர்களை நடாத்துதல்

குறிக்கோள்கள்

- சந்தை பங்கை அதிகரித்துக் கொள்வது
- சனாதிபதி நிதியத்திற்கு வழங்கும் பங்களிப்பினை அதிகரித்தல்
- புதிய தொழில்நுட்பத்தை தழுவிக் கொள்ளுதல் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துதல்
- பங்காளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல

எமது அடிப்படை விழுமியங்கள்

நேர்மை
நாங்கள் அறிமுகப்படுத்தும் லொத்தர்களும் நாம் தொழில் முயற்சியை மேற்கொள்ளுகின்ற விதமும் நியாயமானதும் நேர்மையானதும் நம்பகத்தன்மையும் கொண்டதாகும்.

நேர்மறையான மனோபாவம்
லொத்தர் தொழில் முயற்சியை மேற்கொள்ளும்போது அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் தாங்கள் முகம் கொடுக்கும் அனைத்து சவால்களையும் நேர்மறையான அணுகுமுறையின் ஊடாக எதிர்கொள்கின்றனர்.

பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு செயலாற்றுதல்
அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களே நம்பிக்கையுடன் தங்களுடைய பணிகளை மேற்கொள்வதுடன் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துகின்றனர்.

புத்தாக்கம்
தொழில் முயற்சியை மேம்படுத்தக்கூடிய முறைகள் தொடர்பாக கருத்துக்களை ஆராய்வதற்கும் மூலோபாயங்களையும் போட்டி தன்மையையும் கொண்ட சந்தை மாற்றங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் துரிதமாக தீர்மானங்களை மேற்கொண்டு செயல்படுவதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது.

குழுவாகச் செயற்படுதல்
அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் வெளிப்படைத்தன்மை பரஸ்பர கௌரவம் மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கைகோர்த்துக் கொண்டு செயற்படுகின்றனர்.

சிறப்புத் தன்மையை இலக்குவைத்தல்
சேவையின் தரத்தை உச்ச மட்டத்தில் பேணிவரும் பொருட்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக முயன்று வருகின்றனர்

எங்கள் வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான பார்வை

1983ஆம் ஆண்டு முதலாவதாக தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை அபிவிருத்தி லொத்தர் நிலையம் என அழைக்கப்பட்டது. கல்வி அபிவிருத்திக்காக நிதி வசதிகளை வழங்குதல் சனாதிபதி நிதியத்துடன் சபை வரலாற்று ரீதியாக கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு காரணமாக மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக நிதி வசதி வழங்குதல் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு நிதி வழங்குதல் ஆகியவை சபையின் பிரதான குறிக்கோள்கள் ஆகும்.

பல்வேறு உள்நாட்டு நிதி மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் நிதியினை ஈடுபடுத்தும் பொருட்டு இடையறாமல் வருமானத்தை தோற்றுவிக்கின்ற திட்டம் ஒன்றை உருவாகுவதற்கு நோக்கம் கொண்ட கலாநிதி விக்கிரம வீரசூரிய அவர்கள் உடனடி லொத்தர் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியை கோரினார்.

இதற்கமைவாக அபிவிருத்தி லொத்தர் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்தன அவர்கள் ரூபாய் 2.2 மில்லியன் பணத் தொகையினை ஒதுக்கிக் கொடுத்தமை மற்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்கள் அதற்கு சமமானதொரு பணத்தொகையினை மகாபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்தில் இருந்து முதலீடு செய்தமை ஆகிய இரண்டு விடயங்களும் மேற்படி வேண்டுகோளுக்கு கிடைத்த திருப்திகரமான இரண்டு பதில்களாக அமைந்தன.

நிதியத்தின் வலுவான தொலைநோக்குக்கு அமைவாக விற்பனை செய்யப்பட்ட முதலாவது லொத்தர் அபிவிருத்தி லொத்தர் என பெயரிடப்பட்டதுடன் பின்னர் சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல புலமைப் பரிசில் நிதியம் ஆகியவற்றின் ஆரம்பக் கட்ட நிதி வசதியளிப்பன் கீழ் 1983 ஜனவரி 19ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் நிலையம் தாபிக்கப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் நிலையம் முக்கியமான பல வெற்றிகளை அடைந்து தனது தொழிற்பாட்டினை ஆரம்பித்த முதலாவது வருடத்தில் வெற்றிகரமாக வருமானத்தை ஈட்டிக் கொண்டது. இதன்மூலம் ஈட்டிக்கொண்ட இலாபத்தின் அதிகமான அளவு நிலையத்தை ஆரம்பிக்கும் விடயத்தில் பங்குதாரர்களாக இருந்த சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு வழங்கப்பட்டது. இற்றைவரை அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமானம் நாட்டில் செல்வத்தை உருவாக்கும் அடிப்படை நோக்கத்திற்காக சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

சனாதிபதி நிதியத்தினால் மேற்படி வருமானத்தில் நூற்றுக்கு ஐம்பது வீதத்தினை நாட்டின் உயர் கல்விக்கு கணிசமான ஒத்துழைப்பினை வழங்கி வரும் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. 1993ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிதியம் எனும் பெயரில் நம்பிக்கை நிதியமாக மாற்றி அமைக்கப்பட்டது. அதனை அடுத்து 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிதியம் அபிவிருத்தி லொத்தர் சபையாக மீண்டும் நிறுவப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட முதலாவது உடனடி / சுரண்டும் ஒரு லொத்தர் அட்டை ரூ.10 இற்கு நாடளாவிய ரீதியில் இயங்கும் விற்பனையாளர்களின் வலைப்பின்னல் ஊடாக விற்பனை செய்யப்பட்டதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் இரண்டு ஜக்பாட் வெற்றியாளர்களை உருவாக்கிய மேற்படி லொத்தர் இத் தொழில்துறையில் தனது நீண்டகால பிரபல்யத்தை வலுப்படுத்துவதற்கு வழிகோலியது.

அடுத்து 1987 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் நிலையத்தினால் சனிதா வாசனா (சனிக்கிழமை அதிர்ஷ்ட லொத்தர்) எனும் பெயரில் முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பை நடாத்தி வெற்றியாளர்களை தீர்மானிக்கும் ஒரு லொத்தரை அறிமுகம் செய்ததுடன் முதலில் அது சனிக்கிழமை நாட்களில் சீட்டிழுப்பு செய்யப்பட்டாலும் இந்த லொத்தர் தற்போது வாரத்தில் ஏழு நாட்களும் சீட்டிழுப்பு செய்யப்படுகின்றது. உடனடியாக சுரண்டி அதிர்ஷ்ட அறிந்து கொள்ளும் லொத்தர்களில் வெற்றியினைப் பெற்றுக் கொள்ளாத லொத்தர் டிக்கெட்டுகளுக்கு விசேடமாக தயாரிக்கப்பட்டு 1998 ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வாசனா சக்ரய (அதிர்ஷ்ட சீட்டிழுப்பு சுற்று) நிகழ்ச்சி ஞாயிற்றுக் கிழமை நாட்களில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மிகவும் உயர்ந்த வரவேற்பு கிடைத்ததால் அபிவிருத்தி லொத்தர் சபை அபிவிருத்தி அதிர்ஷ்டம் எனும் பெயரில் தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பை நடாத்தும் இரண்டாவது லொத்தரை அறிமுகம் செய்ததுடன் அச் சீட்டிழுப்பு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒளிபரப்பப்பட்டது. அதன் தனித்துவமிக்க தன்மையினை கருத்திற் கொண்டு 2015 ஆம் ஆண்டில் 12 லக்கினங்களுடன் கூடிய விசேட அம்சத்துடன் அது லக்கின (ராசி) அதிர்ஷ்டம் எனும் பெயரில் மீண்டும் பெயரிடப்பட்டதுடன் தற்போது வாரத்தின் ஏழு நாட்களிலும் சீட்டிழுப்பு நடாத்தப்படுகின்றது.

ஜாக்பாட் பரிசுகள் மற்றும் சாதாரண பணப் பரிசுகள் உள்ளடங்கிய லொத்தர்களுக்கு மேலதிகமாக அபிவிருத்தி லொத்தர் சபை 2004 ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஜயோதா சீட்டிழுப்பினை அறிமுகப்படுத்தியதுடன் இது திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது. அதில் சூப்பர் ஜாக்பாட் பரிசு ரூபாய் 10 மில்லியன் ஆரம்பத் தொகையில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை லொத்தர் வரலாற்றில் தனித்துவமானதொரு படிமுறையை பதிவு செய்யும் வகையில் அபிவிருத்தி லொத்தர் சபை ஜயோதா நியத்த ஜெக்பொட் பரிசில் வெற்றியாளர்களுக்கு ரூபாய் 1 மில்லியன் பணத்தொகை அல்லது ஒரு மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான பெறுமதியைக் கொண்ட ஒரு வீட்டைத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியது.

அபிவிருத்தி லொத்தர் சபை 2009 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஜன ஜய லொத்தர் சீட்டை அறிமுகம் செய்ததுடன் இது வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை கிழமை நாட்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. வெற்றியாளர்கள் சிறப்புப் பரிசுகளை வெற்றி கொள்வதற்கு 64 இலக்கங்களில் தெரிவு செய்யப்படுகின்ற 4 வெற்றி இலக்கங்களுடன் மற்றுமொரு இயந்திரத்தில் பன்னிரண்டு இலக்கங்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற சிறப்பு இலக்கத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். இந்த சிறப்பு பரிசில் ரூபாய் 2.5 மில்லியன் பணத் தொகையில் ஆரம்பிக்கின்றது.

2012 ஜூலை மாதம் 11 ஆம் திகதி சுப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டமை இந்நாட்டின் லொத்தர் வரலாற்றில் புரட்சிகரமானது ஒரு திருப்புமுனையை பதிவு செய்தது. ரூபாய் 30 மில்லியன் பணப் பரிசுடன் ஆரம்பிக்கின்ற இந்த விசேடமான லொத்தர் இந்நாட்டின் மிகப்பெரிய ஜாக்பாட் பணப் பரிசை வழங்குகின்ற லொத்தராக அமைவதுடன் இது நாட்டு மக்களில் பெருந்தொகையான வாடிக்கையாளர்களை ஈர்த்துக் கொள்வதற்கு ஆற்றலைப் பெற்றுக்கொண்டது.

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையினால் பல புதிய லொத்தர் சீட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அபிவிருத்தி லொத்தர் சபை 2016 மே மாதம் 14ஆம் திகதி அபிவிருத்தி இலட்சாதிபதி லொத்தர் சீட்டினை அறிமுகப்படுத்தியதுடன் இது 5.6 மில்லியன் சீட்டுகளை விற்பனை செய்து சாதனை படைத்தது. மேலும் 2016 ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட கோடிபதி சனிதா (கோடீஸ்வரர் சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பு) லொத்தர் சீட்டு விற்பனை ஆரம்ப விற்பனை முதல் சுற்றின் போதே 4.4. மில்லியன் லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதற்கான ஆற்றலைப் பெற்றது.

புதிய எதிர்பார்ப்பினை தோற்றுவித்து புதிய ஈர்ப்புடன் கூடியதாக மூன்று பணப் பரிசில்களை கொண்டதாக அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி லொத்தர் தொலைக்காட்சி லொத்தர் சீட்டிழுப்பு 2016 டிசம்பர் 12ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது இதற்கு மேலதிகமாக இலங்கை லொத்தர் வரலாற்றில் வாரத்தின் ஏழு நாட்களிலும் சீட்டிழுப்பு நடாத்தப்படுகின்ற முதலாவது லொத்தர் என்ற வகையில் 2017 ஆகஸ்ட் 31ஆம் திகதி அத கோடிபதி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் லொத்தர் சந்தையினை கட்டியெழுப்புவதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக 2020 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை வாடிக்கையாளர்களுக்கு தங்களது ஸ்மார்ட் செல்லிடத் தொலைபேசி வாயிலாக லொத்தர் சீட்டினை கொள்வனவு செய்வதற்கான வசதியினை கருத்திற்கொண்டு "DLB Sweep App" செயலியை அறிமுகப்படுத்தியதுடன் அதனுடன் இலங்கை லொத்தர் சந்தையில் முதலாவது டிஜிட்டல் லொத்தராக "சசிறி" டிஜிட்டல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு நிதியினை சேகரிப்பதற்காகவே தாபிக்கப்பட்டது. ஆகவே அபிவிருத்தி லொத்தர் சபையின் அனைத்து இலாபமும் சனாதிபதி வழங்கப்படுகின்றது வழங்கப்படுகின்றது. இதற்கமைவாக சபையின் வரலாற்று முழுவதிலும் சபை மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்ற கடந்த 37 வருட காலமாக ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பாக அந்நிதியத்திற்கு இருபத்தேழு (30) பில்லியனுக்கு மேற்பட்ட தொகையினை வழங்கியுள்ளது.

முக்கியமான திருப்புமுனைகள்

1983

இலங்கையில் முதல் முறையாக உடனடி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1987

இந்நாட்டில் முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட சனிதா வாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1993

அபிவிருத்தி லொத்தர் நிலையம் அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிதியமாக உருமாற்றம் செய்யப்பட்டது.

1997

அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிதியம் 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக "அபிவிருத்தி லொத்தர் சபை" எனும் பெயரில் மீண்டும் தாபிக்கப்பட்டது.

- ரூபாய் 2 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டத்தினை அடைந்தது.

1998

வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளாத உடனடி / சுரண்டும் லொத்தர் சீட்டுகளுக்கு வாசனா சக்ரய (அதிர்ஷ்ட சக்கரம்) தொலைக்காட்சி சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது

- முதல் பரிசாக சொகுசுமோட்டார் வாகனத்தை பரிசாக வழங்கும் 100 ரூபாய் பெறுமதியுடைய லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்கின்ற விண்டோஸ் மற்றும் யுரேகா உடனடி லொத்தர் சீட்டுடன் அபிவிருத்தி அதிர்ஷ்ட லொத்தர் சீட்டு அறிமுகப்படு த்தப்பட்டது.

1999

2000 ஆம் ஆண்டு எதிர்நோக்க வேண்டியிருந்த தொழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் கணினி அமைப்பு மீளமைக்கப்பட்டது.

2004

அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடி அம்சமாகிய பணப்பரிசு அல்லது ஒரு வீடு எனும் முறையுடன் கூடிய ஜயோதா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

- ரூபாய் மூன்று பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டம் மட்டத்தினை அடைந்தது.

2008

இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

- ரூபாய் 5 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வினை பதிவு செய்தது.

2010

சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் ஜனஜய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

2011

நியத்த ஜய (வெற்றி நிச்சயம்) லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

2012

ரூபாய் 30 மில்லியன் பெருமதியுடைய சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் சுப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

2013

ஆகக்கூடிய பெறுமதியுடைய ஜாக்பாட் பரிசுத்தொகையை வழங்குகின்ற ஹைவே ட்ரீம் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

2014

குறுஞ்செய்தி சேவை ஊடாக லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது

2016

சங்வர்தன லக்ஷபதி (அபிவிருத்தி இலட்சாதிபதி) கோட்டிபதி சனிதா (சனிக்கிழமை கோடிஸ்வரர்) மற்றும் சங்வர்தன வாசனா (அபிவிருத்தி அதிர்ஷ்டம்) ஆகிய லொத்தர்களை ஆரம்பித்தல்.

2017

அத கோட்டிபதி (இன்றைய கோடீஸ்வரர்) லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது

2018

IVR மற்றும் குறுஞ்செய்தி சேவை ஊடாக பெறுபேறுகளை அறியத் தரும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2019


DLB Sweep App பயன்பாட்டினை அறிமுகப்படுத்துதல்

2020


“சசிரி” எனும் டிஜிட்டல் லொத்தரை அறிமுகம் செய்தல்

நிதிச்சிறப்பம்சங்கள்


வருமானம் (ரூ)




வரிக்கு முந்திய இலாபம்




சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ)




வருமான வரி



அரசுக்கான மொத்த பணவனுப்பல்கள்



மொத்த சொத்துக்கள்



தொழிற்பாட்டு விளைவுகள்	2020	2019
வருவாய்	15,033,029,360	17,065,414,012
மொத்த இலாபம்	6,369,222,716	7,117,747,971
வரிக்கு முந்திய இலாபம்	2,993,501,638	2,897,130,924
வருமான வரி	10,921,555	235,073,385
தேறிய இலபாம்	3,018,654,911	2,668,792,667
சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு	2,982,580,083	2,668,792,667

நிதி நிலைப் பற்றிய கூற்று

சொத்துக்கள்		
ஆதனங்கள் இயந்திரசாதனங்கள்		
மற்றும் உபகரணங்கள்	1,236,649,449	1,245,588,144
ஊழியர் நலன் சார்ந்த சொத்துக்கள	-	7,038,067
நிரந்தர வைப்புகள்	1,338,731,761	1,451,307,572
இருப்புகள்	32,590,632	51,026,204
வர்த்தக கடனாளிகள் மற்றும்		
ஏனைய வருமதிகள்	92,541,218	126,012,880
முற்கொடுப்பனவுகள் மற்றும் வைப்புகள்	8,197,378	5,212,271
கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு	541,662,763	795,666,048
மொத்த சொத்துக்கள்	**3,250,373,201**	**3,681,851,186**

பொறுப்புகள்		
ஊழியர் நலன்சார்ந்த பொறுப்புகள்	3,636,437	-
விநியோகத்தர்களுக்கு		
செலுத்தவேண்டியவை	36,390,381	36,110,381
கடன் செலவுறுதிச்சீட்டு		
செலுத்தவேண்டியவை	115,286,040	160,547,860
வர்த்தக மற்றும் ஏனைய		
செலுத்தவேண்டியவை	516,032,675	563,493,496
சனாதிபதி நிதியத்திற்கு		
செலுத்தவேண்டியவை	685,860,083	477,792,667
செலுத்தவேண்டிய பரிசு	578,618,857	760,794,203

உரிமைப் பங்கு		
சனாதிபதி நிதியம்	2,200,000	2,200,000
மகாபொல நம்பிக்கை நிதியம்	2,200,000	2,200,000
பரிசு ஒதுக்கீட்டு கணக்கு	698,558,607	1,103,197,285
மீள்மதிப்பீட்டு மிகை	614,729,237	575,515,293
ஊழியர் நலன் திட்டத்தின் மீள் மதிப்பிடப்பட்ட இலாபம் / (நட்டம்)	(3,139,116)	-
மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்	**3,250,373,201**	**3,681,851,186**
இலாபத்தன்மை விகிதம்		
தேறிய இலாப விகிதம்	20%	17%
மொத்த இலாப விகிதம்	42%	42%
திரவ நிலை விகிதம்		
நடைமுறைச் சொத்து விகிதம	1 : 1.66	1 : 1.64
ஊடனடி (திரவ) சொத்து விகிதம்	1 : 1.64	1 : 1.60

தலைவரின் செய்தி மற்றும் 2020 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கை

சவால் மிக்கதொரு காலகட்டமாக இருப்பினும் அபிவிருத்தி லொத்தர் சபை அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலகு தன்மையையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்தி நுகர்வோரின் விருப்பத் தெரிவுக்கு முன்னுரிமை வழங்கியது. கடந்த 12 மாத காலம் என்பது கொடிய வைரஸ் தொற்றுக்கு எதிரான ஒரு சவாலாக இருந்ததெனினும் அனைத்து துறைகளுக்கும் உந்து சக்தியை வழங்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் வலுவான மற்றும் ஆற்றல் வாய்ந்த உதவி முறைமையின் காரணமாக எமது இலக்குகளின் அண்மித்ததொரு இடத்தினை அடைந்து கொள்வதற்கு எமக்கு வாய்ப்பு கிட்டியது.

அபிவிருத்தி லொத்தர் சபை அரசினால் ஒழுங்குறுத்தப்படுகின்ற லொத்தர் உற்பத்திகளை இலங்கை மக்களுக்கு விற்பனை செய்வதுடன் லொத்தர் சீட்டினை கொள்வனவு செய்வது மூலம் அவ்வாறு கொள்வனவு செய்பவர்கள் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு வழங்குகின்றார்கள் என்றே பொருள்படுகின்றது. பங்குடமையாளர்களின் எதிர்பார்ப்புகளையும் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளையும் சமநிலையில் தக்க வைத்துக் கொண்டு பல்வேறு காரணங்களினால் சில வித்தியாசங்கள் காணப்படினும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஆற்றல் கிடைத்திருக்கின்றது.

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுகளை இத்தால் நான் சமர்ப்பிக்கின்றேன். சவால்மிகு சூழ்நிலை நிலவிய போதும் சனாதிபதி நிதியத்திற்கு ரூபாய் 2,982 மில்லியன் பங்களிப்பினை வழங்கி 2020 ஆம் ஆண்டில் ரூபாய் 15,400 மில்லியன் புரள்வினை அடைந்து கொள்வதற்கு சபைக்கு இயன்றது இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 87 வீதம் அடைவினை நெருங்குவதாக அமைந்துள்ளதென சபை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

	2019	2020	அடைவு
வருமானம் (ரூ.மி)	17,799	15,400	87%
சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு (ரூ.மி)	2,669	2,982	112%
வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை (ரூ.மி)	8,903	7,702	87%

நடப்பு நிதி சார் மீளாய்வு - 2020

கோவிட் - 19 தொற்று நிலை அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாடுகளுக்கு எதிர்வு கூறமுடியாத அளவில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் ரூபாய் 17,001 மில்லியனாக இருந்தபோதிலும் உண்மை வருமானம் ரூபாய் 15,400 மில்லியனாக அமைந்தது. இந்த வித்தியாசம் தற்போது நாம் முகம் கொடுக்கும் கொவிட் - 19 தொற்று நிலை காரணமாக ஏற்பட்டதொரு விடயமாகும். மறுபுறத்தில், சனாதிபதி நிதியத்திற்கு வழங்கிய உண்மையான பங்களிப்பு ரூபாய் 2,982 மில்லியனாக இருந்ததுடன் வரிச் சட்டத்தில் மாற்றம், வற் வரி குறைப்பு மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியினை அகற்றல் போன்ற காரணங்களினால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட உண்மையான வரி பங்களிப்பு ரூபாய் 378 மில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் (ரூபாய் 1,220 மில்லியன்) 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரி பங்களிப்பில் பாரியதொரு வீழ்ச்சி காணக்கூடியதாக உள்ளது.

எமது வெற்றிகள்

கொவிட் - 19 நிலைக்கு மத்தியிலும் விற்பனையின் மூலம் அடைந்து கொள்ளப்பட்ட வரவு 91% வீதமாக இருந்தது. சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு உத்தேசிக்கப்பட்ட அளவைவிட 110% வீதமாக காணப்பட்டதுடன் கடந்த ஆண்டின் விற்பனை அடைவு 87% வீதமாக இருந்தது. தற்போது நிலவும் கொவிட் நிலையின் மத்தியிலும் கூட சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 112% வீதமாக உள்ளது.

புதிய திருப்புமுனைகள்

எம்மைச் சுற்றியுள்ள பரந்த சமூகம் மீது எமக்கு ஒரு பொறுப்பு உள்ளது. இதனடிப்படையில் வழங்கப்பட்ட பரிசு பணத தொகையின் அளவு ரூபாய் 7.7 பில்லியன் ஆகும். சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட ஆகக் கூடிய பங்களிப்பு தொகை (ரூபாய் 2.9 பில்லியன்) 2020 ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டுள்ளது.

எமது குழு

அபிவிருத்தி லொத்தர் சபையின் துடிப்புள்ள மற்றும் வலுவான குழு எமது வெற்றியின் அடிப்படை காரணியாகும். எமது, சந்தைப்படுத்தல், நிதி, தகவல் தொழில்நுட்பம், பெறுகைகள், விற்பனை, நிர்வாக மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய துறைகளைச் தேர்ந்த குழுக்கள் இவ்விடயத்தில் முன்னணியில் திகழ்கின்றனர். அவர்களின் புத்தாக்க கருத்துக்கள் எமது உற்பத்திகளை முன்னெடுத்துச் சென்று லொத்தர் அனுபவங்களை புதிய பரிமாணத்திற்கு கொண்டுவந்து சபையினை உயர்ந்ததொரு மட்டத்திற்கு உயர்த்தி வைத்துள்ளது.

புதிய தொழில்நுட்பம்

DLB Sweep App

24 மணித்தியாலங்களும் இயங்கும் Interactive Voice Response பதில் அளிக்கும் முறைமை ஊடாக ஒரு செயலியின் வாயிலாக நாம் மேலும் பல வெற்றிகளை அடைந்துள்ளோம். DLB Sweep App செயலி மூலம் பாவனையாளர்களுக்கு ஸ்மார்ட் தொலைபேசியின் ஊடாக தங்களுடைய வெற்றியினை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. செல்லிடத் தொலைபேசியினை பயன்படுத்தி லொத்தர் சீட்டில் உள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தங்களுடைய வெற்றியையும் சம்பந்தப்பட்ட பரிசு தொகையையும் உறுதி செய்து கொள்வதற்கு அதன்மூலம் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

"சசிறி" டிஜிட்டல் லொத்தர்

2020 செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளர் திரு எஸ்.ஆர்.ஆடிகல அவர்களின் தலைமையில் தெற்காசியாவின் முதலாவது டிஜிட்டல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து அபிவிருத்தி லொத்தர் சபை தனித்துவமிக்க ஒரு திருப்புமுனையை

பிரவேசித்தமை பதிவு செய்யப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டீ.எல். பீ ஸ்வீப் செயலி (DLB Sweep App) எனும் செல்லிடத் தொலைபேசி செயலி ஊடாக பொதுமக்களுக்கு "சசிறி" எனும் வர்த்தக பெயரின் கீழ் அந்த லொத்தரை கொள்வனவு செய்வதற்கு இப்பொழுது வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த செல்லிடத் தொலைபேசி பிரயோகம் ஊடாக ராசி, சுப்பர் போல், சனிதா போன்ற லொத்தர்களை இப்போது கொள்வனவு செய்ய முடியும். சசிறி லொத்தரின் அச்சிடப்பட்ட சீட்டுகளும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள லொத்தர் விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

குறுஞ்செய்தி சேவைகள் (SMS) லொத்தர்

தனது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஊடாக அபிவிருத்தி லொத்தர் சபை 2020 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி குறுஞ்செய்தி ஊடாக அல்லது USSD குறியீடு ஒன்றை தொடர்பு கொள்வதன் மூலம் எந்த ஒரு செல்லிடத் தொலைபேசி வாயிலாகவும் லொத்தர் சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கான வசதியை நடைமுறைப்படுத்தியதையடுத்து சபை மற்றுமொரு தனித்துவமிக்க திருப்புமுனையை அடைந்ததுடன் இந்த கருத்திட்டத்தின் 01 ஆம் கட்டத்தின் கீழ் டயலொக் மற்றும் மொபிடெல் இணைப்புகளை பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்களுக்கு இந்த செயல்முறையின் ஊடாக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த வசதிகள் ஏனைய தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா மற்றும் சசிறி டிஜிட்டல் லொத்தர் ஆகிய லொத்தர் குறுஞ்செய்தி சேவை / USSD தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்ய முடியும்.

வங்கிகளுடன் ஒருங்கிணைதல்

நவீன தொழில்நுட்ப போக்குகளுக்கு இசைவாக்கம் அடைவதன் ஊடாக இலங்கை லொத்தர் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய அரச நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை 2020 மார்ச் மாதம் 20ஆம் திகதி இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் ஒத்துழைப்பினை கட்டியெழுப்பி சபையின் நிதி கொடுக்கல் வாங்கல்களை வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுறுதிமிக்க வகையிலும் மேம்படுத்தும் பொருட்டு அவ் வங்கிகளின் கணினி முறைமையினை இச்சபை பயன்படுத்தும் லொத்தர் முகாமைத்துவ முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்டதென குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இந்த வசதி அசௌகரியமற்ற அனுபவத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை இதன் மூலம் விநியோகத்தர்களுக்கு வங்கியின் நடைமுறை செயலியை பயன்படுத்தி காசு வைப்பீட்டு இயந்திரம் ஊடாகவும் (CDM) இணையவழி வங்கி நடவடிக்கைகள் (Internet Banking) ஊடாகவும் இணையத்தள தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காசு வைப்பீடு செய்ய முடியும்.

நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட விற்பனைப் பிரதிநிதிகள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் 16,350 பேருக்கு மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கு உதவி வழங்கும் பொருட்டு நிதி உதவியாக ரூ.2500/- வீதம் வழங்கியதுடன் அந்நிகழ்ச்சி திட்டத்திற்குசெலவு செய்யப்பட்ட பணத்தொகை ரூ.40 மில்லியன் ஆகும்.

மேலும், அபிவிருத்தி லொத்தர் சபை தனது விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் கொவிட் - 19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்படைவதற்கு 2020 ஆம் ஆண்டில் 37,500 கையுறைகளை விநியோகிக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. மேலும், 2020ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் சபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட 2,421 கோப்பைகளை வழங்கியது.

அனுசரணை வழங்குவதற்கு பங்களிப்பு வழங்குதல்

- கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ. 3.2 மில்லியன் பெறுமதியான மரக்கறி பொதிகளை வழங்கியது.

- அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு களனி துருத்து பெரஹெராவிற்கு ரூ. 1,000,000.00 பங்களிப்பு வழங்கியது.

- அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு கதிர்காம எசல பெரஹெராவிற்கு ரூ. 1000,000.00 பங்களிப்பு வழங்கியது

- இதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற கங்காராம நவம் பெரஹெராவிற்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ.250,000.00 அனுசரணையை வழங்கியது.

மேதகு சனாதிபதி, கௌரவ நிதி அமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோரினால் வழங்கப்படும் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டுதல்களுக்கு எனது நன்றியினை நான் தெரிவிக்கின்றேன். கடந்த சில ஆண்டுகளிலும் தற்போதும் எமது சமுதாயத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கி எமது வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான சேவைகளை வழங்குவதற்கு பணியாற்றியுள்ள மற்றும் பணியாற்றுகின்ற மிகவும் திறமையும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு ஆளணியின் ஒத்துழைப்புடன் அக்காலகட்டத்திற்குள் அறிவினை பெற்று, அறிவினை பரிமாற்றம் செய்துகொண்டு எமது பல்வேறு பங்காளர்களுடன் ஒன்றாக பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிட்டியமை மிகவும் பெறுமதி மிக்க அனுபவமாக இருக்கின்றது.

சீட்டிழுப்பகளின் போது கலந்துகொண்ட அனைத்து நடுவர்களுக்கும், சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதிக்கும், மகாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்தின் பணியாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும், விற்பனை உதவியாளர்களுக்கும், மீள் விற்பனையாளர்களுக்கும், ஊடகங்களுக்கும், வங்கிகளுக்கும், அனைத்து சேவை வழங்குனர்களுக்கும் குறிப்பாக பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர்கள் உள்ளிட்ட எமது நிறைவேற்று பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள் ஆகிய அனைவருக்கும் எனது விசேட நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், மேலதிக முயற்சியை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் தனது பணியை செவ்வனே நிறைவேற்றி எமது வெற்றிக்காக பங்களிப்பு வழங்கிய ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு ஊழியரையும் நாம் ஒருபோதும் மறப்பதில்லை. நாம் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருப்பதை அர்த்தமிக்கதாக மாற்றுவதற்கு அவர்கள் உண்மையிலேயே எமக்கு ஒத்துழைப்பு வழங்கினர். மேலும், எமது சேவைகளுக்கு அனுசரணை வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றி உரித்தாக வேண்டும் என்பதுடன் அவர்களின் அனுசரணையின்றி இந்த வெற்றிகளை ஒருபோதும் நாம் அடைந்திருக்க முடியாது என்பதை குறிப்பிட விரும்புகின்றோம். மேலும், எங்களுக்கு வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புக்கு கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களுக்கும் மற்றும் கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்திற்கும் எமது நன்றி உரித்தாகுக.

இறுதியாக, இந்த நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு தொடர்பாக எமது அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் எதிர்வரும் காலங்களிலும் உங்களின் இடையறாத ஒத்துழைப்பினை பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

அனுஷ பெல்பிட்ட

தலைவர்/பிரதம நிறைவேற்று

அதிகாரி

பணிப்பாளர் சபையின் மீளாய்வு

1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தினால் அபிவிருத்தி லொத்தர் சபை நிர்வகிக்கப்படுகின்து. சனாதிபதி நிதியத்திற்கும் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கும் நிதியினை வழங்குதல் சபையின் பிரதான குறிக்கோள்களாகும். அபிவிருத்தி லொத்தர் சபை தொற்று நோய் நிலை மத்தியிலும் 2020 ஆம் ஆண்டில் சனாதிபதி நிதியத்திற்கு கணிசமான அளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது.

	2019	2020	அடைவு
வருமானம் (ரூ.மி)	17,799	15,400	87%
சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு (ரூ.மி)	2,669	2,982	112%
வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை (ரூ.மி)	8,903	7,702	87%

எமது முக்கிய அடைவுகள்

கொவிட் - 19 தொற்றையடுத்து எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எமக்கு ஆற்றலுள்ள புதிய முறைகளை பற்றி சிந்திக்க நேர்ந்தது. அதற்கமைவாக நாம் கடந்த ஆண்டில் டிஜிட்டல் இடைவெளியில் முக்கியமான சில திருப்புமுனைகளை அடைந்தோம். அவ்வாறு பெற்றுக்கொண்ட சில வெற்றிகள் பின்வருமாறு:

■ டீஎல்பீ ஸ்வீப் (DLB Sweep) செல்லிடத் தொலைபேசி செயலி (பிரயோகம்)

எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த முறையில் விருத்தியாக்கப்பட்டதும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டதுமான சேவையினை வழங்கும் பொருட்டு DLB Sweep App பிரயோகம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப் பிரயோகத்தின் ஊடாக மக்களுக்கு லொத்தர் பெறுபேறுகளை அறிந்து கொள்ளுதலுக்கு மேலதிகமாக கிரெடிட் / டெபிட் அட்டைகள், வங்கி கணக்குகள் போன்ற பணம் செலுத்தும் முறைகள் ஊடாக ராசி அதிர்ஷ்டம், சனிதா, சுப்பர் போல் மற்றும் சசிறி டிக்கட்டுகளை கொள்வனவு செய்ய முடியும்.

■ வங்கிகளுடன் ஒருங்கிணைதல்:
அபிவிருத்தி லொத்தர் சபையின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கவகையிலும் பயனுறுதிமிக்க வகையில் உயர்த்தும் பொருட்டு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் ஒத்துழைப்பினை கட்டியெழுப்பி அவ் வங்கிகளின் கனணி முறைமை, சபை பயன்படுத்தும் லொத்தர் முகாமைத்துவ முறைமையுடன் இணைக்கப்பட்டது.

■ சசிறி டிஜிட்டல் லொத்தர் மற்றும் DLB Sweep App நடைமுறைப்படுத்துதல்:

2020 செப்டம்பர் மாதத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை தெற்காசியாவின் முதலாவது டிஜிட்டல் லொத்தர் "சசிறி" வர்த்தக பெயரின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

தொற்று நிலைக்கு மத்தியில் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.

விற்பனை முகவர்களும் விற்பனை உதவியாளர்களும் அபிவிருத்தி லொத்தர் சபையின் உயிர் மூச்சாக இருப்பதுடன் அவர்கள் எமது வெற்றிக்காக கட்டாயமாக பங்களிப்பு வழங்க வேண்டிய ஒரு தரப்பாக இருக்கின்றனர். தொற்று நிலை காரணமாக பல விற்பனை முகவர்களும் உதவியாளர்களும் இன்னலுக்கு முகம் கொடுத்ததுடன் இந்த சவால்மிகு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு கை கொடுப்பதற்கு சில நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

■ அபிவிருத்தி லொத்தர் சபை கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட விற்பனைப் பிரதிநிதிகள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் 16,350 பேருக்கு மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கு உதவி வழங்கும் பொருட்டு நிதி உதவியாக ரூ.2500/- வீதம் வழங்கியதுடன் அந்நிகழ்ச்சி திட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை ரூ.40 மில்லியன் ஆகும்.

■ மேலும், அபிவிருத்தி லொத்தர் சபை தனது விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் கொவிட் - 19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்படைவதற்கு 2020 ஆம் ஆண்டில் 37,500 கையுறைகளை விநியோகிக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

■ மேலும், 2020ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் சபையின் இலச்சினையை பொறிக்கப்பட்ட 2,421 கோப்பைகளை வழங்கியது.

அனுசரணை வழங்குவதன் பொருட்டு பங்களிப்பு வழங்குதல்

■ கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ. 3.2 மில்லியன் பெறுமதியான மரக்கறி பொதிகளை வழங்கியது.

■ அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு களனி துருத்து பெரஹெராவிற்கு ரூ. 1,000,000.00 பங்களிப்பு வழங்கியது.

■ அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு கதிர்காம எசல பெரஹெராவிற்கு ரூ. 1000,000.00 பங்களிப்பு வழங்கியது

■ இதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற கங்காராம நவம் பெரஹெராவிற்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ.250,000.00 அனுசரணையை வழங்கியது.

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதமர் அவர்களுக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கும் சபையின் பணிப்பாளர் சபையின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதுடன் கொவிட் - 19 தொற்று காரணமாக நாட்டில் காணப்பட்ட இக்கட்டான சூழலில் மத்தியிலும் சபையின் ஆண்டிற்கான இலக்கினை அடைந்து கொள்வதற்கு துடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றிய எமது அனைத்து ஊழியர்களுக்கும் பணிப்பாளர் சபையின் சார்பில் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவிக்க வேண்டிய பலர் இருப்பினும் எமது வாடிக்கையாளர்களுக்கு எமது உற்பத்திகளை வழங்குவதற்கு பெருமளவு பங்களிப்பினை வழங்கிய எமது விற்பனை செயலணிக்கு குறிப்பாக விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், விற்பனை உதவியாளர்கள் மற்றும் மீள் விற்பனையாளர்களுக்கு எமது நன்றியினை இத்தால் தெரிவிக்கின்றோம். இறுதியாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் மீது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டுள்ள எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தரப்புகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவிக்கின்றேன்.



ரவிந்ர ஜே.விமலவீர
பணிப்பாளர

பணிப்பாளர் சபை - 2020

திரு.அமித கமகே
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
2020.12.17 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திருமதி. ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன
செயலாளர்,
வர்த்தக அமைச்சு
பணிப்பாளர்
2020.10.05 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திரு.எச்.ஜீ. சுமனசிங்க
மேலதிக செயலாளர்,
நிதி அமைச்சு,
பணிப்பாளர்
2020.01.11 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திருமதி ஜெனட் ஜயவர்தன
(சட்டத்தரணி)
பணிப்பாளர்
2020.01.15 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திரு.ரவீந்ர ஜே.விமலவீர
பிரதம நிதி உத்தியோகத்தர்
சனாதிபதி செயலகம்
பணிப்பாளர்
2020.07.20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

தற்போதைய பணிப்பாளர் சபை

திரு. வீ.பீ.கே. அனுஷ பெல்பிட்ட
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

2021.06.19 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திருமதி.ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன

2020.10.05 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

செயலாளர், வர்த்தக அமைச்சு

திரு. ரவிந்ர ஜே.விமலவீர

பிரதம நிதி அதிகாரி,
சனாதிபதி செயலகம்

2020.07.20 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திருமதி. ஜெனட் ஜயவர்தன

சட்டத்தரணி
பணிப்பாளர்
2020.01.15 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

திருமதி. கே.ஏ.எச்.சீ புபுதுசிறி

2021.06.28 ஆம் திகதி முதல்
நடைமுறைக்கு வரும் வகையில்

பணிப்பாளர்
வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
நிதி அமைச்சு

முகாமைத்துவக் குழு

01 **திரு.வீ.பீ.கே.அனுஷ பெல்பிட்ட**
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

02 **திரு.டபிள்யூ.கே.ஏ.ஏ ஜயரத்ன**
பொது முகாமையாளர்

03 **செல்வி டபிள்யூ.எ.வீ.சீ சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

04 **திரு. டி.டி.சி. தமிந்த**
பிரதி பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)

05 **திரு. கே. என் புலத்சிங்கள**
உதவி பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)

06 **திரு.சுனில் ஜயரத்ன**
உதவி பொது முகாமையாளர் (விற்பனை)

07 **திரு.டி.கசுன் ஜயசூரிய**
உதவி பொது முகாமையாளர் (நிதி)

08 **திரு. நிஷான் பெரேரா**
உதவி பொதுமுகாமையாளர் (நிதி)

09 **திருமதி. அசங்கா எஸ். குணசிங்க**
உதவி பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)

10 **திரு.பீ.பீ. மதுர ஹர்ஷன**
உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

11 **திரு. ரோஹான பிரசாத் ரணசிங்க**
உதவி பொது முகாமையாளர்
(மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)

12 **திரு. பீ.டி.யூ மலிந்த**
உதவி பொதுமுகாமையாளர் (பெறுகைகள்)

13 **திரு. எஸ்.எம்.ஏ வசந்த உதயகுமார**
உள்ளக கணக்காய்வாளர்

கனிஷ்ட தரத்திலான முகாமையாளர்கள்

01 **திரு.ஈ.டீ.ஐ.என்.எஸ். அபேரத்ன**
நிர்வாக உத்தியோகத்தர்

02 **திரு.ஜே.எம்.டீ.ஏ கிறிசாந்த**
தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர்

03 **திரு. எம்.பி.எம்.என்.கே.பலகல்ல**
பிராந்திய முகாமையாளர்

04 **திரு. சி.சி. ஜலப்பெரும**
பிராந்திய முகாமையாளர்

05 **திரு. ஜீ.ஏ.ஆர்.எஸ். ரணதுங்க**
பிராந்திய முகாமையாளர்

06 **திரு. எம்.கே.ஏ.ஐ. கமல்சிறி**
பிராந்திய முகாமையாளர்

07 **திரு. ஐ.டி.பத்ம குமாரசிரி**
பிராந்திய முகாமையாளர்

08 **திரு.டீ.எம்.பி.எல். மஹிந்த**
பிராந்திய முகாமையாளர்

09 **திருமதி.எம்.எல் கௌரி கௌசல்யா**
பிராந்திய முகாமையாளர்

10 **திரு. ஆர்.ஏ.சுனில் ரத்னாயக்க**
பிராந்திய முகாமையாளர்

11 **திரு. ஆர்.எம்.யு.எஸ்.குமார**
பிராந்திய முகாமையாளர்

12 **திரு. என்.வி.இந்திக உடபுல்**
நிதி உத்தியோகத்தர்

13 **திருமதி. ஆர்.டி.சி.ராஜபக்ஷ**
நிதி உத்தியோகத்தர்

14 **திருமதி. எம்.எல்.என். குணசேகர**
நிதி உத்தியோகத்தர்

15 **திருமதி.ஏ.டபிள்யூ.ஜீ. ரூபசிங்க**
நிதி உத்தியோகத்தர்

16 **திரு. யு.ஜி. இலேபெரும**
கணனி முறைமை பகுப்பாய்வாளர்

17 **திருமதி சி.என்.தெவரப்பெரும**
மனித வள உத்தியோகத்தர்

18 **திரு. பி.ஏ.சி.ஜே.கருணாரத்னா**
பெறுகைகள் உத்தியோகத்தர்

19 **திரு. பிரசன்ன கோகுலா பர்னாந்து**
போக்குவரத்து உத்தியோகத்தர்

20 **திருமதி ஜி.டி.எஸ்.பிரேமதிலக**
சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் உத்தியோகத்தர்

தொழிற்பாட்டு மீளாய்வு

2020 ஆம் ஆண்டின் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான விசேட விடயங்கள

அபிவிருத்தி லொத்தர் சபை 2020 ஆம் ஆண்டுக்கான தனது விற்பனை நடவடிக்கைகளை உரிய முறையில் திட்டமிட்டிருந்தாலும், முழு நாட்டிற்கும் தாக்கம் ஏற்படுத்திய கொவிட்-19 தொற்று நிலை காரணமாக ஆண்டின் முதலாவது காலாண்டுக்கு பின்னர் இலக்குகளை அடைந்து கொள்வதன் முன்னேற்றத்தில் மந்தநிலையொன்று ஏற்பட்டது. எவ்வாறாயினும், சபையானது சந்தைப்படுத்தலுக்கு பின்பற்றிய மூலோபாயங்களின் காரணமாக ஆண்டின் இறுதி காலாண்டில் தனது விற்பனையை மீண்டும் அதிகரித்துக் கொள்வதற்கு சபைக்கு ஆற்றல் கிட்டியது. மேலும், நடப்பு ஆண்டில் சபை நடைமுறைப்படுத்திய பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் செயன்முறை காரணமாக வெற்றியாளர்களுக்கு கணிசமானளவு பரிசு தொகைகளை வழங்குவதற்கு வாய்ப்பு கிட்டியதுடன் சனாதிபதி நிதியத்துக்கும் பெருந்தொகையான பணத் தொகையை வழங்குவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஆற்றல் கிட்டியது.

01. மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

பின்வரும் விற்பனை மேம்படுத்தல் முறைமைகளை பின்பற்றுவதன் ஊடாக அபிவிருத்தி லொத்தர் சபைக்கு 2020 ஆம் ஆண்டில் தனது விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டியது.

• சனிதா வாசனாவ (சனிக்கிழமை அதிர்ஷ்டம்)

சனிக்கிழமை அதிர்ஷ்ட் லொத்தரின் 3322 ஆம் சீட்டிழுப்புக்கு 2020 ஜூன் மாதம் எட்டாம் தேதி (திங்கட்கிழமை) **"அவுருது வாசனா"** (புதுவருட அதிர்ஷ்டம்) எனும் பெயரில் அழைக்கப்பட்ட விசேட சீட்டிழுப்பொன்று நடத்தப்பட்டதுடன், இந்த விசேட சீட்டிழுப்புக்கு 1.4 மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. இந்த விசேட சீட்டிழுப்பில் ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் கொவிட் தொற்று காரணமாக அதனை திட்டமிட்டவாறு ஏப்ரல் மாதத்தில் நடத்த இயலாமல் போனது. மேலும், 3416 ஆம் சீட்டிழுப்புக்கு 2020 அக்டோபர் 29ஆம் திகதி (வியாழக்கிழமை) ஒரு விசேட சீட்டிழுப்பும் நடத்தப்பட்டதுடன் அதற்கும் 1.4 மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. **"சனிதா வாசனா"** எனும் வர்த்தகச் சின்னத்தை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி லொத்தர் வாரத்தில் ஏழு நாட்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு **2020 செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதி (புதன்கிழமை)** முதல் **"சனிதா"** எனும் பெயரில் அதன் பெயர் மாற்றப்பட்டு **2020 செப்டம்பர் 2ஆம் திகதி முதல் 2020 நவம்பர் 22ஆம்** திகதி வரையிலான காலப்பகுதியில் **"இரண்டாம் அலை"** எனும் ஒரு சிறிய சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது. அளவின் அடிப்படையில் நோக்குகையில் இது கணிசமானளவு விற்பனை அதிகரிப்பை காட்டியது.

• லக்ன வாசனாவ (ராசி அதிர்ஷ்டம்)

2020 பெப்ரவரி 28 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) ராசி அதிர்ஷ்டம் லொத்தருக்கு **"சுபிரி தன யோகய"** எனும் ஒரு விசேட சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது. இந்த விசேட சீட்டிழுப்புக்கு விற்பனை செய்யப்பட்ட மொத்த லொத்தர் சீட்டுகளின் பெறுமதி ரூ. **2.8** மில்லியன் ஆகும். இதற்கிடையில், **2020** ஆகஸ்ட் **28** ஆம் திகதியில் (திங்கட்கிழமை) **"சுபிரி தன யோகய"** எனும் மற்றுமொரு சீட்டிழுப்பு நடத்தப்பட்டதுடன் அதில் ரூ. **2.6** மில்லியன் பெறுமதியான சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. மேலும், **2020 செப்டம்பர் முதலாம் திகதி முதல் அக்டோபர் 31 ஆம் திகதி** வரையிலான காலப்பகுதியில் **"டபள் சான்ஸ்"** எனும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டது.

• ஜயோதா

ஜயோதா லொத்தர் சீட்டிழுப்பு பொதுவாக செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமை நாட்களில் நடாத்தப்பட்டாலும் இந்தக் கால அட்டவணையை திருத்தி அச்சீட்டிழுப்பினை **2020** செப்டெம்பர் **02** ஆம் திகதி (புதன்கிழமை) முதல் திங்கள் மற்றும் புதன்கிழமை நடாத்துவதற்கு மாற்றியமைக்கப்பட்டது.

• சுப்பர் போல்

சுப்பர் போல் லொத்தருக்கு பெரும் வரவேற்பு இருப்பதை கருத்தில் கொண்டு **2020 செப்டம்பர் 2 ஆம் திகதி முதல்** இந்த லொத்தர் ஒரு வாரத்தின் ஏழு நாட்களிலும் சீட்டிழுப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் **2020 செப்டெம்பர் 30ஆம் திகதி (புதன்கிழமை)** நடாத்தப்பட்ட விசேட சீட்டிழுப்புக்கு **ரு.2.2** மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. **"சுப்பர் 500"** என அழைக்கப்பட்ட பிரதான சீட்டிழுப்புக்கு மேலதிகமாக **2020** செப்டம்பர் **2** ஆம் திகதி முதல் **2020** நவம்பர் **22** ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சிறிய சீட்டிழுப்பு தொடர் ஒன்றும் நடாத்தப்பட்டது.

• அபிவிருத்தி அதிர்ஷ்டம்

அபிவிருத்தி அதிர்ஷ்டம் லொத்தர் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சீட்டிழுப்புக்கு உட்படுத்தப்பட்டதெனினும் **2020 செப்டம்பர் 2 ஆம் திகதி முதல்** இந்த லொத்தர் சீட்டிழுப்பு வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை நாட்களில் நடத்தப்படுவதற்கு மாற்றியமைக்கப்பட்டு சீட்டிழுப்பு கால அட்டவணை திருத்தி அமைக்கப்பட்டது.

• அத கோடிபதி

2020 யூலை **31** ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நாளில் **"அத விசேஷ கோடிபதி"** எனும் ஒரு விசேட சீட்டிழுப்பு நடத்தப்பட்டதுடன் அந்த மேம்படுத்தல் ஊடாக ரூ.**1.6** மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. அத கோடிபதி பிரதான சீட்டிழுப்பு தவிர்ந்த **2020** ஆகஸ்ட் **17** ஆம் திகதி முதல் **2020 அக்டோபர் 17ஆம் திகதி வரை** "சல்லி சீசன்" எனும் சிறிய சீட்டிழுப்பும் நடத்தப்பட்டது.

• சசிரி

2020 அக்டோபர் 14 ஆம் திகதி (புதன்கிழமை) தெற்காசியாவின் முதலாவது டிஜிட்டல் லொத்தர் வியாபார சின்னமாக "சசிரி" எனும் பெயரில் ஒரு புதிய லொத்தர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இந்த லொத்தர் புதன் மற்றும் சனிக்கிழமை நாட்களில் சீட்டிழுக்கப்பட்டது.

• உடனடி லொத்தர்

உடனடி லொத்தர் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு விற்பனை முகவர்களுக்கு "அத்தஹித்த" எனும் உடனடி லொத்தர் வெளியிடப்பட்டதுடன் இந்த லொத்தரின் பரிசுகளாக விளக்குகள், ஒலிவாங்கிகள், ஸ்பீக்கர்கள், சூரிய ஒளியில் தொழிற்படும் விளக்குகள், அம்பிளிபயர் மற்றும் ஒலிபெருக்கி இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

02. 2020 ஆம் ஆண்டிற்கான விற்பனை விநியோகத்தர்கள் மற்றும் விற்பனை முகவர்களை நியமித்தல்

03. விற்பனை முகவர்களினதும் விற்பனை உதவியாளர்களினதும் நலனுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

♦ அபிவிருத்தி லொத்தர் சபை கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட 16,350 விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கு உதவி செய்யும் பொருட்டு நிதி உதவியாக ரூ.2,500/- வீதம் வழங்கப்பட்டதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட பணத் தொகை ரூ. 40 மில்லியன் ஆகும்.

♦ அபிவிருத்தி லொத்தர் சபை தனது விற்பனை முகவர்களுக்கும் அவர்களை கொவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டில் 37,500 கையுறைகளை விநியோகிக்கும் கருத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது.

♦ மேலும், 2020ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் சபையின் சின்னம் பொறிக்கப்பட்ட 2,421 கோப்பைகளை விநியோகித்தது.

♦ 2020 மார்ச் 12 ஆம் தேதி இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் கணினி முறைமை இச்சபையில் பயன்படுத்தப்படும் லொத்தர் முகாமைத்துவ முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்டதன் மூலம் லொத்தர் விநியோகத்தர்களுக்கு இணையவழி (ஒன்லைன் பேங்கிங்) வங்கி நடவடிக்கைகளை பயன்படுத்தி பணத்தை வைப்பீடு செய்வதற்கான புதியதொரு வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் விநியோகத்தர்களுக்கு வங்கியின் செல்லிடத் தொலைபேசி செயலியை பயன்படுத்தி பணத்தை வைப்பு செய்யும் (CDM) இயந்திரத்தின் மூலமும் இணையவழி வங்கி முறைமை மூலமும் இணையத்தள தொழில்நுட்பத்தின் ஊடாக பணத்தை வைப்பு செய்ய முடியும்.

மாவட்டத்தின் இலக்கம்	மாவட்டம்	விற்பனை விநியோகத்தர்கள்	விற்பனை முகவர்கள்
01	கொழும்பு	01	11
02	களுத்துறை		01
03	கண்டி		05
04	மாத்தளை		03
05	நுவரெலியா		01
06	காலி		01
07	மாத்தறை		
08	அம்பாந்தோட்டை		02
09	யாழ்ப்பாணம		01
10	மன்னார்		01
11	வவுனியா		
12	மட்டக்களப்பு		
13	அம்பாறை		01
14	திருகோணமலை		
15	குருநாகல்		
16	புத்தளம்		
17	அனுராதபுரம்		
18	பொலநறுவை		01
19	பதுளை		
20	மொணராகலை		02
21	இரத்தினபுரி		
22	கேகாலை		01
23	கம்பஹா		04
24	கிளிநொச்சி		
25	முல்லைத்தீவு		
		01	35

04. அனுசரணை வழங்குவதற்கு பங்களிப்பு வழங்குதல்

♦ கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ. 3.2 மில்லியன் பெறுமதியான மரக்கறி பொதிகளை வழங்கியது.

♦ அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு களனி துருத்து பெரஹெராவிற்கு ரூ. 1,000,000.00 பங்களிப்பு வழங்கியது.

♦ அபிவிருத்தி லொத்தர் சபை 2020ஆம் ஆண்டு கதிர்காம எசல பெரஹெராவிற்கு ரூ. 1000,000.00 பங்களிப்பு வழங்கியது

♦ இதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற கங்காராம நவம் பெரஹெராவிற்கு அபிவிருத்தி லொத்தர் சபை ரூ.250,000.00 அனுசரணையை வழங்கியது.

05. விசேட நிகழ்ச்சித் திட்டங்கள

♦ 2020 ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை IOS மற்றும் ஆண்ட்ராய்ட் ஆகிய இருவகையான ஸ்மார்ட் செல்லிடத் தொலைபேசி பயன்படுத்துனர்களுக்காக DLB Sweep App எனும் செல்லிடத் தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்தி டிஜிட்டல் உலகத்தில் கால் பதித்தது. இந்த பயனர்களுக்கு இணையத்தளத்தின் ஊடாக இந்த செயலியை பயன்படுத்தி ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், சனிதா மற்றும் சசிரி ஆகிய லொத்தர்களை கொள்வனவு செய்வதற்கும் அனைத்து லொத்தர்களினதும் சீட்டிழுப்பு பெறுபேறுகளை அறிந்து கொள்வதற்கும் பரிசுத் தொகையை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

♦ மேலும், 2020 டிசம்பர் 15ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை லொத்தர் சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கான குறுஞ்செய்தி சேவை (SMS) லொத்தர்களையும் USSD முறைமையையும் அறிமுகப்படுத்தியது.

எமது உற்பத்திகளைப் பற்றிய மேலோட்டம்

அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதி நிதியத்தின் ஊடாக கல்வி மற்றும் சமுதாய நடவடிக்கைகளுக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது. சபையானது சுரண்டும் லொத்தர் மற்றும் சீட்டிழுப்பு லொத்தர் ஆகியவற்றை போட்டி வடிவத்திலான இரண்டு லொத்தர்களாக உற்பத்தி செய்கின்றது. சசிரி டிஜிட்டல் லொத்தர் "Sweep" செல்லிட தொலைபேசி செயலி ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது.

- சீட்டிழுப்பு போட்டிகள் - லொத்தர் மூலம் சீட்டிழுப்பு நடாத்தப்படும் இலக்கங்களுடன் விளையாட்டு லொத்தர் சீட்டிலுள்ள இலங்கங்களை ஒப்பிடுவதன் மூலம் இந்த விளையாட்டு மேற்கொள்ளப்படுகிறது.
- சுரண்டும் போட்டிகள் - முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட பரிசில்கள் உள்ளதா என்பதை கண்டறிவதற்காக கடதாசியில் லொத்தர் சீட்டில் உள்ள மறைந்திருக்கும் இலக்கங்களை சுரண்டி வெளிப்படுத்திக் கொள்வதின் ஊடாக இந்த போட்டி நடாத்தப்படுகின்றது.

- **லொத்தர் சின்னங்களின் பட்டியல்**

திங்கள் / செவ்வாய் / புதன் / வியாழன் / வெள்ளி / சனி / ஞாயிறு	திங்கள் / செவ்வாய் / புதன் / வியாழன் / வெள்ளி / சனி / ஞாயிறு	திங்கள் / செவ்வாய் / புதன் / வியாழன் / வெள்ளி / சனி / ஞாயிறு
திங்கள் / செவ்வாய் / புதன் / வியாழன் / வெள்ளி / சனி / ஞாயிறு	செவ்வாய் / வெள்ளி / ஞாயிறு	புதன் / செவ்வாய்
திங்கள் / புதன்	புதன் / வெள்ளி	

01. அத கோடிபதி



♦ உற்பத்தியின் தொலைநோக்கு

சந்தையில் முதன்மையாகத் திகழ்தல் மற்றும் இலங்கையின் பிரபல்யமான லொத்தராக மாற்றமடைதல்

♦ உற்பத்தியின் பணி

அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய பரிசு கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனூடாக சபையின் இலாபத்தன்மையை மேம்படுத்திக் கொள்ளுதல்

♦ போட்டி விபரம்

சீட்டிழுப்பு நடாத்தப்படும் தினங்கள் : திங்கள் முதல் ஞாயிறு வரை (வாரத்தில் ஏழு நாட்களும்)

லொத்தர் நிறம்: சிவப்பு, கரு நீலம், பச்சை, ஊதா, இளஞ்சிவப்பு, இளநீலம்

தொடக்க ஜாக்பாட் பரிசு : ரூ.50,000,000/-

விளையாட்டு : இலக்கங்கள் 04/77, ஆங்கில எழுத்துக்கள் 1/26

♦ பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது தனி இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது ஆங்கில எழுத்து	ரூ. 20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 1,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 1,000,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 40.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 1,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 100,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது நான்கு இலக்கங்கள்	ரூ. 50,000,000.00

02. சனிக்கிழமை அதிர்ஷ்டம் (சனிதா)



♦ உற்பத்தியின் தொலைநோக்கு

திங்கட்கிழமை முதல் ஞாயிறு வரை (வாரத்தின் ஏழு நாட்களிலும் நிகழ்நிலையற்ற லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் இலங்கையின் முதன்மை லொத்தர் உற்பத்தியாக மாற்றமடைதல்

♦ உற்பத்தியின் பணி

புதன், சனி மற்றும் திங்கள் ஆகிய நாட்களில் சீட்டுழுப்பு நடாத்தப்படும் இலங்கையின் நிகழ்நிலையற்ற முதன்மை லொத்தராக அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய பரிசு கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சபையின் இலாபத்தன்மையை உயர்த்துதல்.

♦ போட்டி விபரம்

சீட்டிழுப்பு நாள் : திங்கள் முதல் ஞாயிறு வரை (வாரத்தின் ஏழு நாட்களும்)
லொத்தர் நிறம் : கரு நீலம், இளம் நீலம், ஊதா, சிவப்பு, இளம் மஞ்சள், பச்சை மற்றும் இளஞ்சிவப்பு
ஆரம்ப ஜாக்பொட் : ரூ.30,000,000
விளையாட்டு : இலக்கம் 04/75, ஆங்கில எழுத்து 1/26

♦ பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு ஆங்கில எழுத்து	ரூ. 20.00
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதவாது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 2,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 1,000,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 60.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 1,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதவாது மூன்று இலக்கங்கள்	ரூ. 100,000.00
ஆங்கில எழுத்துடன் நான்கு இலக்கங்கள்	ரூ. 30,000,000.00

03. கோடிபதி கப்ருக



உற்பத்தியின் தொலைநோக்கு

ஜாக்பாட் பரிசினை வென்று கொள்வதற்கான விருப்பத்துடன் உள்ள மக்களின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் ஒரு லொத்தர் உற்பத்தி செய்யப்படுதல்

உற்பத்தியின் பணி

ஜாக்பொட் பரிசினை வென்று கொள்வதற்கான விருப்பத்துடன் உள்ள மக்கள் விரும்புகின்ற லொத்தர் ஒன்றை தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்

போட்டி விபரங்கள்

சீட்டிழுப்பு நடாத்தப்படும் தினங்கள் : செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை
லொத்தர் நிறம் : இளஞ் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள்
விளையாட்டு : இலக்கங்கள 04/80, ஆங்கில எழுத்துக்கள் 1/26

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது ஒரு ஆங்கில எழுத்து	ரூ. 20.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 60.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 1,000.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 2,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 100,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 1,000,000.00
ஆங்கில எழுத்துடன் நான்கு இலக்கங்கள்	ரூ.75,000,000.00

04. லக்ன வாசனாவ (லக்கின அதிஷ்டம்)



உற்பத்தியின் தொலைநோக்கு

ராசி அடையாளத்தின் மூலம் அதிர்ஷ்டத்தை அடைந்து கொள்ளலாம் என நம்புகின்ற மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற முன்னணி லொத்தராக மாறுதல

உற்பத்தியின் பணி

ராசி அடையாளத்தின் மூலம் அதிர்ஷ்டம் கிடைக்கின்றது என நம்புகின்ற மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற லொத்தர் ஒன்றை உற்பத்தி செய்தல்

போட்டி விபரங்கள்

சீட்டிழுக்கும் நாட்கள் : திங்கள் முதல் ஞாயிறு வரை (வாரத்தில் ஏழு நாட்களும்)
லொத்தர் நிறம் : மஞ்சள், சிவப்பு, பச்சை, கபிலம், நீலம், இள நீலம், ஊதா
ஆரம்ப ஜாக்பாட் பரிசு ரூ. 2,000,000
விளையாட்டு : இலக்கங்கள் 04/62 , லக்கின அடையாளம் 1/12

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது ஒரு லக்கினம்	ரூ. 20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 1,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 500,000.00
லக்கின அடையாளத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 60.00
லக்கின அடையாளத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 200.00
லக்கின அடையாளத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 10,000.00
லக்கின அடையாளத்துடன் நான் இலக்கங்கள்	ரூ. 2,000,000.00

05. சுப்பர் போல்



உற்பத்தியின் தொலைநோக்கு

இலங்கையின் லொத்தர் சந்தையில் முன்னணி மற்றும் பிரபல்யமான லொத்தராக மாறுதல்

உற்பத்தியின் பணி

அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய பரிசு கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனூடாக சபையின் இலாபத்தை மேம்படுத்திக் கொள்ளுதல்

போட்டி விபரம்

சீட்டிழுப்பு நாட்கள்: திங்கள் முதல் ஞாயிறு வரை (வாரத்தில் ஏழு நாட்களும்)
லொத்தர் நிறம் : ஊதா இளம் நீலம், இளம் மஞ்சள், பச்சை, இளஞ் சிவப்பு, கடும் நீலம் மற்றும் சிவப்பு
ஆரம்ப ஜாக்பாட் பரிசு : ரூ. 50,000.000
விளையாட்டு: இலக்கங்கள் 04/77, ஆங்கில எழுத்துக்கள் 1/26

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு ஆங்கில எழுத்து	ரூ. 20.00
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 2,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 1,000,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 40.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 1,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 100,000.00
ஆங்கில எழுத்து மற்றும் நான்கு இலக்கங்கள்	ரூ. 50,000,000.00

06. சங்வர்தன வாசனாவ(அபிவிருத்தி அதிர்ஷ்டம்)



உற்பத்தியின் தொலைநோக்கு

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வருமானம் மற்றும் இலாபத்தை ஈட்டி தந்து சிறப்புமிக்க நம்பகத்தன்மையுடன் கூடிய கௌரவமான பரிசு திட்டம் ஒன்றை வழங்கி சீட்டிழுப்பு நடைபெறும் இரண்டு நாட்களிலும் மிகப் பிரபல்யமான உற்பத்தியாக மாற்றமடைதல்

உற்பத்தியின் பணி

சபையின் இலாபத்தை மேம்படுத்தி நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக புதிய பரிசு கட்டமைப்புகளை வழங்கி வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் இலங்கையில் பிரபல்யமான இணையவழியற்ற லொத்தராக மாற்றமடைதல்

போட்டி விபரம்

சீட்டிழுக்கும் நாட்கள் : வியாழன் / வெள்ளி
லொத்தர் நிறம்: நீலம் மற்றும் சிவப்பு
ஆரம்ப ஜாக்பாட் பரிசு : ரூ. 10,000,000/-
விளையாட்டு : இலக்கங்கள் 03/70 அதிஷ்ட இலக்கம் 01/90, ஆங்கில எழுத்துக்கள் 1/26

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
அதிஷ்ட இலக்கம்	ரூ.20.00
ஆங்கில எழுத்து	ரூ.20.00
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ.20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ.100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ.50,000.00
அதிர்ஷ்ட இலக்கத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ.100.00
அதிர்ஷ்ட இலக்கத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ.500.00
அதிர்ஷ்ட இலக்கத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ.500,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ.100.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ.500.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ.100,000.00
அதிர்ஷ்ட இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம்	ரூ.200.00
அதிர்ஷ்ட இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துடன் இரண்டு இலக்கங்கள்	ரூ.10,000.00
அதிஷ்ட இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துடன் மூன்று இலக்கங்கள்	ரூ.10,000,000.00

07. ஜயோதா



உற்பத்தியின் தொலைநோக்கு

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வருமானத்தையும் லாபத்தையும் ஈட்டித்தந்தது சிறப்பும் நம்பகத் தன்மையும் கொண்ட பரிசு திட்டம் ஒன்றை வழங்கி திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் ஜனரஞ்சகமான லொத்தர் உற்பத்தியாக மாற்றமடைதல்

உற்பத்தியின் பணி

சபையின் இலாபத்தை மேம்படுத்தி மிகவும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக புதிய பரிசு கட்டமைப்புகளை வழங்கி திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் இலங்கையின் மிகவும் பிரபல்யமான லொத்தர் உற்பத்தியாக மாற்றமடைதல்

போட்டி விபரம்

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கள் மற்றும் வியாழன்
லொத்தர் நிறம்: மஞ்சள் மற்றும் செம்மஞ்சள்
ஆரம்ப ஜாக்பாட் பரிசு: ரூ.20,000,000
விளையாட்டு: இலக்கங்கள் 04/70, ஆங்கில எழுத்துக்கள் 1/26

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு ஆங்கில எழுத்து	ரூ. 20.00
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 2,000.00
நான்கு இலக்கங்கள்	ரூ. 1,000,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 40.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 1,000.00
ஆங்கில எழுத்துடன் ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 50,000.00
ஆங்கில எழுத்துடன் நான்கு இலக்கங்கள்	ரூ. 20,000,000.00

08. நியத்த ஜய



உற்பத்தியின் தொலைநோக்கு

முதன்மையான இலத்திரனியல் வியாபாரச் சின்னமாக மாற்றமடைல்

விளையாட்டின் விபரம்

புத்தாக்க, அதி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் இற்றைவரை பயன்படுத்திக்கொள்ளப்படாத புதிய சந்தையினை உருவாக்குதல் மற்றும் அதன் மூலம் சபையின் இலாபத்தன்மையை மேம்படுத்துதல்

போட்டி விபரம்

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கள் மற்றும் புதன்
லொத்தர் நிறம்: : நீலம் மற்றும் செம்மஞ்சள்
விளையாட்டு இலக்தங்கள் : 03 / 50

பரிசுக் கட்டமைப்பு

எழுத்து இலக்கக் கூட்டு	பரிசு (ரூ)
ஏதாவது ஒரு இலக்கம்	ரூ. 20.00
ஏதாவது இரண்டு இலக்கங்கள்	ரூ. 100.00
ஏதாவது மூன்று இலக்கங்கள்	ரூ. 1,000,000.00

11. உடனடி வெற்றி லொத்தர்



அறிமுகம்

இலங்கையின் உடனடி லொத்தர் முன்னோடியாக 1983ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையினால் முதன்முறையாக உடனடி லொத்தர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையின் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட போது அது இந்நாட்டில் புதியதொரு எண்ணக்கருவாக இருந்தது.

உற்பத்தியின் தொலைநோக்கு

நிகழ்நிலை அல்லாத உடனடி வெற்றி வாய்ப்பினை வழங்கும் லொத்தர் ஊடாக இலங்கைச் சந்தையில் முதன்மை யாளராக மாற்றமடைதல்

உற்பத்தியின் பணி

சபையின் லாபத்தை மேம்படுத்திக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக புதிய பரிசு கட்டமைப்புகளையும் புதிய தோரணையை அறிமுகப்படுத்தி இலங்கையின் இணைய வழி அல்லாத உடனடி வெற்றி வாய்ப்பினை பெற்று தரும் லொத்தர் சந்தையின் முதன்மையாளராக மாறுதல்.

போட்டி பின்னணி

அபிவிருத்தி லொத்தர் சபை சந்தைக்கு உடனடி லொத்தர் அறிமுகப்படுத்தியதன் பின்னர் தேசிய லொத்தர் சபையினால் சந்தைக்கு இரண்டு உடனடி லொத்தர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. செவன மற்றும் சமூர்த்தி இந்த இரண்டு லொத்தர்கள் ஆகும்.

செவன லொத்தர் அபிவிருத்தி லொத்தர் சபையின் உடனடி சுரண்டும் லொத்தரின் நேரடி போட்டியாளராக காணப்பட்டது. செவன உடனடி லொத்தரை நடாத்துவதற்கு தேசிய லொத்தர் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் புறம்பானதொரு நிறுவனம் தாபிக்கப்பட்டது. இதன் காரணமாக மக்கள் இதனை இந்நாட்டிலுள்ள சிறப்பு உடனடி லொத்தர் தொழில் முயற்சி நிறுவனமாக கருதினர்.



நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை

அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்புடன் கூடிய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பை கொண்டுள்ளதுடன் அது தனது லொத்தர் உற்பத்தி மற்றும் பரிசில்கள் ஊடாக இலங்கையர்களுக்கு நிச்சயமானதும் நிலைபேறானதுமான பெறுமதியை உருவாக்கித் தருகின்றது.

நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை

அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்புடன் கூடிய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பை கொண்டுள்ளதுடன் அது தனது லொத்தர் உற்பத்தி மற்றும் பரிசில்கள் ஊடாக இலங்கையர்களுக்கு நிச்சயமானதும் நிலைபேறானதுமான பெறுமதியை உருவாக்கித் தருகின்றது.

கடந்த பத்தாண்டு காலத்திற்குள் அபிவிருத்தி லொத்தர் சபை அடிப்படையில் நிலைபேறான தொழில் முயற்சி நிறுவனமாக மாறியுள்ளது. ஆரம்பம் முதல் அபிவிருத்தி லொத்தர் சபை வெறுமனே அதன் மிகவும் அண்மித்த பங்கீடு பாட்டாளர்களின் நலன் எனும் விடயத்தை விட அதிகமாக கவனம் செலுத்தி போட்டித் தன்மைமிக்க தொழில் முயற்சி மூலோபாயங்களை உருவாக்கும் விடயம் சமூகத்தின் ஒட்டுமொத்த நீண்டகால தேவைகள் மற்றும் விழுமியங்களுடன் முரண்பாடு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதிப் படுத்தி வருகின்றது. நிறுவனத்தின் நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை, அதன் தோற்றப்பாடுகள், நிலைபேறான தன்மைக்கு தேவையான மூலோபாயங்கள், பொருளாதாரப் பொறுப்பு, சமூகப் பொறுப்பு மற்றும் சுற்றாடல் பொறுப்பு ஆகிய விடயங்களை மேற்படி விடயம் தழுவியதாக அமைந்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்புடன் கூடிய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பை கொண்டதாக இருப்பதுடன் அது தனது லொத்தர் உற்பத்தி மற்றும் பரிசுகள் வாயிலாக இலங்கையருக்கு நிச்சயமானதும் நிலைபேறாபனதுமான பெறுமதியை உருவாக்கித் தருகிறது. இந்த அறிக்கையின் மூலம் சமூக பொருளாதார சுற்றாடல் பொறுப்புகளை பேணிவரும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன. அபிவிருத்தி லொத்தர் சபையின் சமூகப் பொறுப்பில் தொழில் முயற்சியின் வாடிக்கையாளர்களின் மற்றும் லொத்தர் வெற்றியாளர்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பொறுப்பு மிகுந்த நடவடிக்கைகளும் அத்துடன் சமுதாய நலன் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்குகின்றன. சுற்றாடல் சார்ந்த பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் அபிவிருத்தி லொத்தர் சபை தனது நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளின் போது சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்து சுற்றாடல் நேயமிக்க முதலீடுகளை மேற்கொள்கின்றது. பொருளாதார ரீதியிலான பொறுப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் சமநிலை ஆகிய ஆளுமை மாதிரியை வெளிப்படுத்துகின்றது.

எமது அடிப்படை விழுமியங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை தெரிவு செய்துள்ள தொழில் முயற்சி துறையில் தனித்துவமான வாடிக்கையாளர் அனுபவத்துடன் அர்பணிப்பு நம்பகத்தன்மை மற்றும் பரிந்துரைகளை வழங்குதல் போன்ற விடயங்களில் சபைக்குத் தெளிவான அபிலாசைகள் உள்ளன. இந்த அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விடயம் எளிதான ஒரு விடயம் அல்ல என்பதுடன் அது பெரும்பாலும் நாம் நிலைபேறான முறையில் பொறுப்புடன் கூடிய தொழில் முயற்சியாக மாற்றமடைந்து வருகின்றோம் என்பதை ஐயமின்றி ஏற்படுத்துவதற்கு எமக்குள்ள ஆற்றலின் மீது தங்கியிருக்கின்றது.

எமது அர்ப்பணிப்புடன் கூடிய பெரும் ஊக்கமிக்க ஊழியர்கள் தொடர்பாக கருத்துரைக்கும் போது அவர்கள் எமக்கு பெரும் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றார்கள் என்பதை குறிப்பிடுதல் வேண்டும். அவர்களும் இந்த பிரயத்தனத்தில் ஒரு பகுதியாக இருப்பதைக் குறித்து அவர்கள் பெருமை அடையக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் பெருமளவு முயற்சிப்பதற்கு காரணம் இதுவாகும். எமது ஊழியப் படையின் சிறப்பு மட்டும் வெற்றியினை ஊக்கப்படுத்தும் பொருட்டு பயிற்சி மற்றும் இடையறாத கல்வி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் நாம் எமது ஊழியர்களுக்காக முதலீடு செய்வதற்கான காரணம் எமது தொழில் முயற்சியின் வெற்றி தங்களது தொழில் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள திருப்தியின் மீது தங்கியிருப்பதால் தான் என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளதால் நிகழ்ந்த விளைவு என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும் எமது நிலைபேறான தன்மை பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துதல், கைத்தொழிலில் தொழில் வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் சனாதிபதி நிதியத்திற்கு மகாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குவதன் ஊடாக சுகாதார பாதுகாப்பு மற்றும் கல்வி போன்ற முக்கியமான சேவைகளை வழங்குவதற்கு உதவி வழங்கும் பொருட்டு வருமானத்தை மேம்படுத்திக் கொள்ளுதல் நோக்கமாக கொள்ளப்படுகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை லொத்தர் கலை வழங்கும்போது வாடிக்கையாளர்களைப் பற்றி அதிகம் கவனம் செலுத்துவதுடன் சேவை வழங்குனர்கள் மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

சுற்றாடல் சார்ந்த பொறுப்பு

சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தை இயன்றளவு குறைப்பதற்கு நாங்கள் மேற்கொள்ளும் பிரயத்தனங்கள் வெற்றியளித்துள்ளது. எமது நிறுவனம் சார்ந்த சமூக பொறுப்பு முயற்சிகளின் போது நாங்கள் பெற்றுக் கொண்டு வரும் முன்னேற்றம் பற்றி நாங்கள் பெருமை அடைகின்றோம். அபிவிருத்தி லொத்தர் சபை ஊழியர்களுக்கு முழுமையான பயிற்சி நவீன தொழில்நுட்பம் மற்றும் பங்காளர்களுடன் ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஊடாக பயனுறுதி மிக்க சமுதாய உதவிச் சேவைகளை வழங்குவதற்கு வாய்ப்பினை உருவாகித் தருகின்றது. நாம் சுற்றாடல் சார்ந்த தாக்கம் பற்றிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இடையில் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் எண்ணம் கொண்டுள்ளோம். இவ்வாண்டின் அறிக்கை எமது சமூகப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய அடிக்கோடு அளவீடாக செயற்படுகின்றது. இந்த அறிக்கையின் ஊடாக நாங்கள் எல்லா ஆண்டுகளிலும் இத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுவதுடன் எதிர்வரும் ஆண்டு எமது குறிக்கோள்களும் எடுத்துரைக்கப் படுகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தமது லொத்தர் உற்பத்தி மற்றும் பரிசுகள் ஊடாக இலங்கையர்களின் வாழ்க்கைக்கு நிலையான மற்றும் நிலைபேறான பெறுமதியை தோற்றுவித்து அர்ப்பணிப்புடன் கூடிய அபிவிருத்தி என் மீது கவனம் செலுத்துகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை சமூக சுற்றாடல் மற்றும் நிதி பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றதென இச்செயற்பாடுகளின் வாயிலாக வலியுறுத்தப்படுகின்றது.

மேலும் அபிவிருத்தி லொத்தர் சபை தமது தாபனம் சார்ந்த செயற்பாடுகளின் போது சுற்றாடல் தாக்கங்களை மேற்பார்வை செய்வதுடன் சுற்றாடல் சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு வலுசக்தியை சேமிப்பதற்கான முதலீடுகளையும் மேற்கொள்கின்றது.

நிறுவனத்தின் சமூக பொறுப்பு

எமது நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எம்மை பெறுமதியான சமுதாய உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படு வேண்டுமென அபிவிருத்தி லொத்தர் சபையாகிய எமக்கு தேவையாக இருக்கின்றது. ஆகவே அர்த்தமுள்ள நீண்டகால பங்குடமைகள் ஊடாக சமுதாயத்துக்கு பங்களிப்பு வழங்குவதற்கும் சுற்றாடல் ரீதியில் நிலைபேறான முறையில் தொழில் முயற்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை கவனம் செலுத்துகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை இலங்கை அரசுக்கு நிதி வசதி அளித்து சமுதாய நலன் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பிரதேசத்திலுள்ள அறக்கொடை நிறுவனங்களுக்கு உதவி அளித்தல் மற்றும் இலங்கையைச் சேர்ந்த எமது மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. லொத்தர் விற்பனையாளர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கை தொடருக்கு உதவி வழங்கி தனிநபர்களின் தொழில் முயற்சியினை வலுவூட்டுவதை நோக்காகக் கொண்ட சமூகம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஆற்றல் கிட்டியது

தொழில் நிலையை வலுவூட்டுவதற்காக நாங்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்

- கோவிட் நிவாரண உதவியாக விற்பனை உதவியாளர்களுக்கு ரூபாய் 40 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது

- கை உறைகள் (கிளவுஸ்) 37,500 பகிர்ந்தளிக்கப்பட்டன.

- கோவிட் தொற்று காரணமாக கொழும்பு மாவட்டத்தில் இன்னலுக்கு உள்ளாகிய மக்களுக்கு ரூபாய் 3.2 மில்லியன் பெறுமதியான உணவு பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஏனைய நிறுவன ரீதியிலான சமூக பொறுப்பு செயற்பாடுகள்

பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெற்ற முகவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 25 பிள்ளைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நன்மை கிட்டியது.

எமது சமூகத்தில் தேவைகள் உடைய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதின் மூலம் மாணவர்களின் வாழ்க்கையில் சாதகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு வழங்குவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது என்பதற்கு எனது பயனாளிகளே உயிருள்ள சாட்சிகளாக இருக்கின்றனர்.

மனித வளம்

சிறந்த தொழில் முயற்சி வழக்கங்களை விருத்தி செய்யும் போதும் நிலைபேறான வாடிக்கையாளர் தொடர்புகளை கட்டியெழுப்பும் போதும் ஊழியர்களின் முக்கியமான பணியினை நாம் வரவேற்புக்கு உட்படுத்துகின்றோம். நாங்கள் எமது ஊழியர்களை பெருமளவு பாராட்டுவதுடன் அவர்கள் வழங்கும் பெறுமதிமிக்க பங்களிப்பு தொடர்பாக எமது பாராட்டினை வெளிப்படுத்துவதற்கு நவீன ஒத்துழைப்பு மிக்க கவர்ச்சி மிகு தொழில் இடத்தை உருவாக்குவதற்கு நாம் முயன்று வருகின்றோம்.

பணியாட்டொகுதியை விருத்திசெய்வதன் குறிக்கோள்கள்

- தொழில் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்

- ஊழியப் படையை திட்டமிடுதல் மற்றும் திறன் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் தரமிக்க ஆட்சேர்ப்பு மற்றும் தக்க வைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தலைமைத்துவம் மற்றும் பின்னூரித்து திட்டமிடலை விருத்தி செய்தல் அத்துடன் தொடர்ச்சியான கல்வியறிவை வழங்குவதை தொடர்ந்தும் விருத்திசெய்தல்

- எமது ஊழியர்கள் வலுவூட்ட படுகின்றார்கள் எனவும் அவர்களின் வெற்றிக்கு வெகுமதி வழங்கப்படுகிறது என்பதையும் உறுதி செய்தல்

- நிறுவனத்தின் மூலோபாயம் சார்ந்ததாக எமது பணியாளர்களை மிகவும் சிறந்த முறையில் விழிப்புணர்வுக்கு உட்படுத்துதல் மற்றும் அவர்கள் விழிப்புணர்வு அடைந்து உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்

உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (குறுங்கால)

பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் / செயலமர்வு	பங்கேற்பாளர்களின் பெயர்கள்	பதவி	பயிற்சிக் காலம்	பயிற்சி நிறுவனம்
கட்டிடங்களுக்கான வளிச்சீராக்கி முறைமை மற்றும் பிரயோகங்கள்	டீ.என்.எஸ்.ஏ.ராஜபக்ஷ	மின் தொழில்நுட் பவியலாளர்	2 நாட்கள	கட்டுமான உபகரணங்கள் பயிற்சி நிலையம் திறன் விருத்தி நிதியம்
புதிய முகாமையாளர்களுக்கு அத்தியாவசியமான திறன்கள்		கனிஷ்ட உதவியாளர	2 நாட்கள்	திறன் விருத்தி நிதியம்
காவலாளிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமைகள், பொறுப்புகள், மற்றும் ஒழுக்கவியல்	திரு. கிறிசாந்த ஜயமஹ திரு.சுஜித் பிரியங்கர திரு. டொனால்ட் தெனவக திரு.எம்.ஆர்.பீ. உதயகுமார திரு. நெவில் குணவர்தன திருமதி ரசிகா ஜயதிலக திரு. லக்சிறி ஜயசிங்க திரு. மஹேஷ் சமீர சமரதுங்க திரு.நிஷாந்த அதிகாரி திரு.துமிந்த மல்லவராச்சி திரு.மஞ்சுல சிசிரகுமார திரு. காமன் சமரதுங்க திரு. எச்.பீ. திலகரத்ன	பிரதான பாதுகாப்ப உத்தியோகத்தர் 12 பாதுகாப்பு உதவியாளர்கள்	1 நாள்	
சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குதல்		25 முகாமைத்துவ உதவியாளர்கள	3 மணித் தியாலம்	இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்
நிகழ்ச்சி முகாமைத்துவம்	திருமதி சேபாலிகா பிரேமதிலக திரு. தினேஷன் பிரயசங்கர் திரு. தாரக விக்கிரமசிங்க	விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர கள் முகாமைத்தவ உதவியாளர்கள்	2 நாட்கள்	திறன் விருத்தி நிதியம்
தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்தி	திரு, இந்திக உடுல் திருமதி சந்திரா ராஜபக்ஷ திரு. சமிந்த கருணாரத்ன திரு பசந்த கோகுல திருமதி சமிலா தெவரப்பெரும	உதவி முகாமையாளர்கள்	2 நாட்கள்	திறன் விருத்தி நிதியம்
இருப்புக் கட்டுப்பாடு மற்றும் வலைப்பின்னல் முகாமைத்துவம் பற்றி சான்றிதழ் பாடநெறி	திருமதி மனோஜதா சஞ்சீவனி	முகாமைத்துவ உதவியாளர்கள்	5 நாட்கள்	கட்டுமான உபகரணங்கள் பயிற்சி நிலையம்
பொது பெறுகைகள் பற்றிய சான்றிதழ்	திருமதி தர்ஷி ரத்னசேகர	முகாமைத்துவ உதவியாளர்கள்	5 நாட்கள்	மிலோதா

பால் நிலைக்கு அமைவாக பகுப்பாய்வு

ஆண் பணியாட்டொகுதி உறுப்பினர்கள்	223
பெண் பணியாட்டொகுதி உறுப்பினர்கள்	93
மொத்தம்	316

பணியாட்டொகுதி வயது பகுப்பாய்வு

வயதுப் பிரிவு	பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை
20-30	54
30-40	120
40-50	89
50 வயதுக்கு மேல்	53
	316

வகுதிக்கு அமைவாக பணியாட்டொகுதி

தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி	1
பொது முகாமையாளர்	1
பிரதி பொது முகாமையாளர்	2
உதவி பொது முகாமையாளர்	8
உள்ளக கணக்காய்வாளர்	1
நிர்வாக உத்தியோகத்தர்	1
பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்	1
பிராந்திய முகாமையாளர்	9
நிதி உத்தியோகத்தர்	4
முறைமை பகுப்பாய்வாளர்	1
மனித வளங்கள் உத்தியோகத்தர்	1
பெறுகைகள் உத்தியோகத்தர்	1
போக்குவரத்து உத்தியோகத்தர்	1
சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்தியோகத்தர்	1
சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உதவியாளர்	16
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	2
ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவியாளர்	1
பிரதான முகாமைத்துவ உதவியாளர்	1
முகாமைத்துவ உதவியாளர்	129
சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பாளர்	3
சாரதி	44
மின் தொழில்நுட்பவியலாளர்	2
காரியாலய காரிய சகாயர்	60
கள ஊக்குவிப்பாளர்	9
கள நடமாடும் அறிவிப்பாளர்	1
பாதுகாப்பு உதவியாளர்	15
	316

2020.12.31 திகதியில் ஊழியர் எண்ணிக்கை

பதவி		அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடம்	மிகை
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி		1	1		
செயற்படுத்தல் பணிப்பாளர்		1		1	
பொது முகாமையாளர்	H.M - 2.1	1	1		
பிரதி பொது முகாமையாளர்(சந்தைப்படுத்தல்)	H.M - 1.1	1	1		
பிரதி பொது முகாமையாளர் (நிதி)	H.M - 1.1	1	1		
உதவி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)	M.M -1.1	2	2		
உதவி பொது முகாமையாள் (நிதி)	M.M- 1.1	3	2	1	
உதவி பொது முகாமையாளர் (விற்பனை)	M.M- 1.1	2	1	1	
உதவி பொது முகாமையாளர்(மனித வள நிர்வாகம்)	M.M- 1.1	1	1		
உதவி பொது முகாமையாளர் (பெறுகைகள்)	M.M- 1.1	1	1		
உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)	M.M- 1.1	1	1		
உள்ளக கணக்காய்வாளர்	M.M- 1.1	1	1		
நிர்வாக உத்தியோகத்தர்	J.M- 1.1	1	1		
பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்	J.M- 1.1	1	1		
போக்குவரத்து உத்தியோகத்தர	J.M- 1.1	1	1		
வலய முகாமையாளர்	J.M- 1.1	10	9	1	
நிதி உத்தியோகத்தர்	J.M- 1.1	4	4		
முறைமை / நிகழ்ச்சித்திட்ட பகுப்பாய்வாளர்	J.M- 1.1	1	1		
பெறுகைகள் உத்தியோகத்தர்	J.M- 1.1	1	1		
மனித வளங்கள் உத்தியோகத்தர	J.M- 1.1	1	1		
சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்தியோகத்தர்	J.M- 1.1	1	1		
விற்பனை ஊக்குவிப்பு உதவியாளர்	MA - 3	24	16	8	
தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்	MA - 3	1		1	
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	MA - 3	4	2	2	
ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உதவியாளர்	MA -3	1	1		
நிதி உதவியாளர்	M.A-2.2	2	0	2	
பிரதான முகாமைத்துவ உதவியாளர்	MA-1.2	1	1		
தனிப்பட்ட உதவியாளர்	MA-1.2	1		1	
முகாமைத்துவ உதவியாளர்	MA-1.2	137	129	8	
சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பாளர்	MA-1.1	5	3	2	
சாரதி	P.L - 3	43	44		1
மின் தொழில்நுட்பவியலாளர்	P.L -3	2	2		
காரியாலய காரிய சகாயர்	P.L -1	65	60	5	
கள ஊக்குவிப்பாளர்	P.L -1	10	9	1	
கள நடமாடும் வண்டி அறிவிப்பாளர்	P.L -1	6	1	5	
பாதுகாப்பு உதவியாளர்	P.L -1	3	15		12
வட்டரீத		342	316	39	13

நிறுவனத்தின் ஆளுகை

நிறுவனத்தின் ஆளுகை முறையின் ஊடாக அதுகுறித்து லொத்தர் சபைக்கு தீர்மானம் மேற்கொள்வதற்கான வழக்கங்கள் மற்றும் வழிகாட்டல் கொள்கைகளை வரையறுத்துக் தருவதுடன் சபையின் நீண்ட கால குறிக்கோள் களுக்கும் மூலோபாயம் களுக்கும் வழிகாட்டல்களை வழங்குகின்றது. நிறுவனத்தின் ஆளுகை மாதிரியின் ஊடாக அபிவிருத்தி லொத்தர் சபையின் பல்வேறு மட்டங்களுக்கிடையில் குறிப்பாக நிர்வாக மட்டங்களுக்கிடையில் அதாவது பணிப்பாளர் சபை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ மட்டங்கள் ஆகியவற்றுக்கு இடையில் அதிகாரங்களும் பொறுப்புகளும் பிரிந்து செல்லும் முறை சுருக்கமாக காட்டப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை கம்பெனியின் தாபன ரீதியிலான கொள்கைகளை நிறுவுவதுடன் இம்முயற்சியின் சிறந்த செயற்பாட்டிற்கு பொறுப்பு கூறுவேண்டிய உத்தியோகத்தர்களாகிய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு மூலோபாய ரீதியிலான வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபை 1997, 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. அச்சட்டத்தின் 3(1) பிரிவினால் பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

(அ) பின்வரும் உறுப்பினர்கள் பதவி வழியில் நியமிக்கப்படுகின்றனர்.

(ஈ) மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்தின் தலைவர் அல்லது அவரின் பிரதிநிதி

(ஊ) சனாதிபதியின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி

(எை) அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற மேலும் பத்து உறுப்பினர்கள் அமைச்சரினால் சபையின் தலைவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன் சபையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் செயற்படும் அவர் சபையின் அலுவல்களை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

பணிப்பாளர் சபையின் கடமைகள்

அரசின் கொள்கைகளுக்கு இசைந்து ஒழுகும் வகையில் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் தொடர்பாக பொறுப்புக் கூறுதல் வேண்டும். அனைத்து சட்ட ரீதியிலான மற்றும் ஏனைய முகாமைத்துவ தேவைப் பாடுகளுக்கு அமைவாகவும் வளங்களை பாதுகாத்தல் உரிய முறையில் கணக்குகளைப் பேணி வருதல் மற்றும் சரியான அறிக்கைகளை தயாரித்தல் போன்றவற்றை உறுதிசெய்து மேற்படி கடமையினை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஆகவே பணிப்பாளர் சபை பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துதல் வேண்டும்

- அமைப்பின் மூலோபாய குறிக்கோள்கள் இயங்கு நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல்
- மூலோபாய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தலைமைத்துவத்தை வழங்குதல்
- பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் வரும் நிலை முகாமைத்துவம் முறைமையொன்று இயங்கு நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல்
- நிறுவனத்தின் முகாமைத்துவ பணிகளை பயனுறுதி மிக்க வகையில் மேற்பார்வை செய்தல்
- தினசரி அடிப்படைகள் தேவைப்படுகின்ற நிதிசார் அம்சங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக போதிய அளவு பங்குடமை யாளர்களுக்கு அறிக்கையிடுதல்
- வளங்களையும் சொத்துக்களையும் பொறுப்புடன் பயன்படுத்துதல்
- கணக்காய்வு குழு மற்றும் ஏனைய குழுக்களை நியமித்தல் அத்துடன் நடத்தை மற்றும் நன்னெறிக் கோவை அத்துடன் நிறுவனம் சார்ந்த மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல்
- சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகள் வழிகாட்டுதல்கள் மட்டும் சுற்றுநிருபங்கள் போன்றவற்றிக்கு அமைவாக அவர்களின் அனைத்து வேட்பாளர்களுக்கும் பொறுப்புக் கூறுதல்
- குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒருமுறையாவது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவ பணியாளர்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளுதல்

பணிப்பாளர் சபை கூட்டங்கள்

நிறுவனத்தின் தொழிற்படுத்தல்கள் மற்றும் பணிப்பாளர் சபை கூட்டங்களின் பெறுபேறுகள் நிறுவனத்தின் பாதீடு மற்றும் சம்பந்தப்பட்ட தர நியமங்களுக்கு அமைவாக உள்ளதா என்பதை உன்னிப்பாக வும் தொடர்ச்சியாகவும் மேற்பார்வை செய்தல். பணிப்பாளர் சபையின் கவனம் விரிவான முறையில் தேவைப்படுகின்ற ஏனைய விடயங்கள் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சிநிரல் பின்பற்றப்படுகின்றது. பணிப்பாளர் சபை மாதத்திற்கு ஒரு முறை கூடுவதுடன் தேவையான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விசேட பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டங்களின் எண்ணிக்கை

கூட்டம் நடாத்தப்பட்ட திகதி	பணிப்பாளரின் பெயர்	பதவி	பங்கேற்றார்
14.02.2020	திரு. ஜகத் பீ. விஜேவீர	தலைவர் / பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திரு.அநுர திசாநாயக்க	பணிப்பாளர்	பங்கேற்கவில்லை
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
27.02.2020	திரு. ஜகத் பீ. விஜேவீர	தலைவர் /பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திரு.அநுர திசாநாயக்க	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
30.04.2020	திரு. ஜகத் பீ. விஜேவீர பணிப்பாளர்	தலைவர் /பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திரு.அநுர திசாநாயக்க	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
22.06.2020	திரு. ஜகத் பீ. விஜேவீர ப.க.தலைவர்	தலைவர் /பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திரு.அநுர திசாநாயக்க	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	பங்கேற்கவில்லை
28.07.2020	திரு. ஜகத் பீ. விஜேவீர	தலைவர் /பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திரு.அநுர திசாநாயக்க	பணிப்பாளர்	☑
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	பங்கேற்கவில்லை
02.09.2020	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர/ப.க.தலைவர்	☑
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
19.10.2020	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்/ப.க.தலைவர்	☑
	திருமதி. ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன	பணிப்பாளர்	☑
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
28.10.2020	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்/ப.க.தலைவர்	☑
	திருமதி. ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன	பணிப்பாளர்	☑
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
09.12.2020	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்/ப.க.தலைவர்	☑
	திருமதி. ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன	பணிப்பாளர்	☑
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑
31.12.2020	திரு.அமித்த கமகே	தலைவர்/பி.நி.அ	☑
	திரு. எச்.ஜீ.சுமனசிங்க	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன	பணிப்பாளர்	பங்கேற்கவில்லை
	திரு.ரவீந்ர ஜே. விமலவீர	பணிப்பாளர்	☑
	திருமதி. ஜெனட் ஜயவர்தன	பணிப்பாளர்	☑

இடர் வரும் நிலை தொடர்பான முகாமைத்துவம் பற்றிய அறிக்கை

பயனுறுதி மிக்க இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழில் முயற்சி செயன்முறையின் பிரதான அம்சமாகும். எமது தொழில் முயற்சியில் இடர்வரு நிலைகள் மற்றும் பெறுபேறு களுக்கு இடையில் பொருத்தமான சமநிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலுக்குள் எமது வளர்ச்சிக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் உதவி அளிக்கும் இடர் வரும் நிலை சார்ந்த முகாமைத்துவ ஆற்றல்கள் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கு முயன்று வருகின்றோம். இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்படுத்தல் கட்டமைப்பின் பிரதான அம்சமாகும். முகம் கொடுக்க தயார் நிலையில் இருக்கின்ற இடர் வரும் நிலை மட்டத்திற்குள் இடர் வரும் நிலைக்கு இலக்காகக் கூடிய விடயங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக ஈட்டிக் கொள்ளுகின்ற வருமானம் மற்றும் மூலதனத்தின் பாதகமான அசைவுகளை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு நாம் முயன்று வருகின்றோம்

இடர் வரும் நிலைகளை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் அவற்றை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கு பொறுப்புமிக்க அணுகுமுறையொன்று அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர்வரு நிலை முகாமைத்துவ முறைமையில் உள்ளடங்குகின்றது. இடர் வரும் நிலையினை பற்றி விழிப்புணர்வூட்டும் நடத்தைகளுக்கு உதவி வழங்கும் உறுதியான இடர் வரும் நிலை முகாமைத்துவ கலாசாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன்மூலம் இடர்வரு நிலைகளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உந்து சக்தியை வழங்குதல் தொடர்பாக எமது கவனம் பிரதானமாக செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையின் நீண்டகால நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு நாம் எமது இடர் வரும் நிலை தொடர்பான மூலோபாயங்களை மேலும் விருத்தி செய்கின்றோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர் வரும் நிலை முகாமைத்துவ மூலோபாயமானது விசேட தரப்புகள், முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கான பின்னூட்டல் முறைமையாக செயற்படுகின்றது. சபையின் தொழில் முயற்சி தொழிற்படுத்தல்கள் முறைமை மற்றும் சேவைகள் சார்ந்ததாக விழிப்புணர்வுடன் தீர்மானம் மேற்கொள்ளும் மூலோபாய புள்ளியாக அதற்கு கிடைக்கும் அந்தஸ்த்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது பின்வரும் விடயங்கள் ஊடாக தொழில் முயற்சி இடர் வரும் நிலைகளுக்கு பதில் அளிப்பதற்கு மூலோபாய மற்றும் தொழில்முயற்சி, திட்டமிடல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில் முயற்சி செயன்முறை ஆகியவற்றுக்கு நிலையானதொரு அணுகுமுறையை வழங்குகின்றது.

- வணிக செயற்பாடுகள் மற்றும் அலகுகள் ஆகியவற்றில் காணப்படும் இடர் வரும் நிலை தொடர்பாக பொதுவான புரிதலை வழங்குதல்

- முன்னேற்றம் அடைந்துள்ள முன்னுரிமைகளை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு தொடர்ச்சியாக இடர்பாடு நிலை தொடர்பான மதிப்பீடு ஒன்றை வழங்குதல்

- ஊழியர்களின் விழிப்புணர்வு மற்றும் முகாமைத்துவ பொறுப்புக்களை அதிகரித்தல்

அபிவிருத்தி லொத்தர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனித்துவமான சில இடர் வரும் நிலைகளுக்கு உள்ளாகின்றது.

பரிசுகளை வழங்குவதில் இடர் வரும் நிலை

அனைத்து மொத்த மட்டத்திலும் பரிசுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விகிதமொன்றை பேணிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விடயத்தில் காசுப் பாய்வுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காரணமாக அதிக விலை விகிதமொன்று காணப்படுவதற்கான இடர் வரும் நிலை தோன்றக்கூடும். மேற்படி இடர் வரும் நிலையினை கையாளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை அச்சகங்களில் இருந்து காப்புறுதி ஒன்றையும் பெற்றுக் கொள்ளுகின்றது.

பொருளாதார இடர் வரும் நிலை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களின் கொள்வனவு போக்குகள் நாட்டில் காணப்படும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களினால் ஏற்படுத்தப்படும் உந்துசக்தியின் மீது தங்கியிருக்கின்றது.

நிதிசார் இடர் வரும் நிலை

வினைத் திறனற்ற காசு பாய்வு முகாமைத்துவம் மற்றும் நிதி தகவல்கள் ஆகியவற்றின் இடர் வரு நிலை ஊடாக நிறுவனத்தின் இலாபத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றிற்கு குந்தகமான நிலைமை ஏற்படுத்தக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை உரிய காப்புறுதி ஏற்பாடுகளை உறுதி செய்வதன் ஊடாக நிறுவன முழுவதிலும் கிரயத்தை கட்டுப்படுத்தும் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல் போன்ற சம்பிரதாயமான நிதி இடர் வரும் நிலை முகாமைத்துவ நடைமுறைகளை பயன்படுத்துகின்றது.

திரவத் தன்மை சார்ந்த இடர் வரும் நிலைகள்

உயர் மட்டத்திலான பரிசுகளை முன்கூட்டியே ஈட்டிக் கொள்வதன் ஊடாக நிதி திரவநிலை தொடர்பான இடர் வரும் நிலைகள் ஏற்படக்கூடும். இவ்வாறான இடர் வரும் நிலைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை ன நிதி சொத்துக்களை உயர்மட்டத்தில் பேணி வருகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தீர்க்கவேண்டிய வேண்டியவைகளை தீர்ப்பதற்கான ஆற்றலை கொண்டு இருந்தபோதிலும் சபையினால் செலுத்தப் படுவதற்கு கடப்பாடு கொண்டுள்ள கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு போதியளவு நிதி வளங்களை பேணி வருவதற்கு அல்லது உருவாக்கிக் கொள்வதற்கு இயலாதவிடத்து அல்லது கணிசமானளவு பாதகமான நிலையின் கீழ் அவற்றைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் போது மாத்திரம் திரவ நிலை தொடர்பான இடர் வரும் நிலைமை தோன்றுகின்றது.

தொழிற்படுத்தல் இடர் வரும் நிலை

முறைமைகள் செயலிழந்து போகுதல் தனி நபர்களினால் ஏற்படக்கூடிய தவறுகள் குற்றவியல் சார்ந்த செயற்பாடுகள் அல்லது உள்ளக முறைமைகள் செயலிழப்புக்கு உள்ளாகுதல் ஆகியவை காரணமாக ஏற்படக்கூடிய நட்டங்கள் தொழிற் படுத்தல் இடர் வரும் நிலையின் கீழ் வருகின்றது. அவ்வாறான நிலைமைகளின் காரணமாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் நிறுவனத்தின் நன் மதிப்பிற்கும் பாதகமான நிலைமைகள் ஏற்படக்கூடும். தொழிற்படுத்தல் இடர் வரும் நிலையினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ச்சியாக உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துகின்றது. நிறுவன ரீதியிலான இடர் வரும் நிலைகளில் ஊடாக ஏற்படும் அச்சுறுத்தல்களை இயன்றளவு குறைப்பதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் முகாமைத்துவத்தினால் தொழிற்படுத்தல் கூறுகள், வணிக செயன்முறைகள் மற்றும் பாரிய அளவிலான கூறுகள் தொடர்பாக தொடர்ச்சியாக இடர் வருநிலை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

வணிக இடர் வரும் நிலை

வணிக இடர் வரும் நிலை மூலோபாய மற்றும்.', அல்லது நற்பெயர் சார்ந்த காரணங்களினால் விளையும் கிரயத்தின் அடிப்படையுடன் ஒப்பிடுகையில் ஏற்படக்கூடிய வருமான பற்றாக்குறைக்கு ஏதுவானதாகும். ஏனைய மேலதிக விடயங்களை நோக்குகையில் வெளி வாரியான பேரண்ட பொருளாதார சூழல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற மூலோபாயம் மற்றும் சபையானது தொழிற்படும் சந்தைக்குள் அதற்கு காணப்படும் நற்பெயர் சபையின் வருமானத்தை ஈட்டும் ஆற்றலின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலை

பங்குதாரர்கள் மத்தியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நற்பெயருக்கு பாதகமான நிலை ஏற்படுதல் காரணமாக நற்பெயருக்கு இடர் வரும் நிலை ஏற்படக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வணிகத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் உள்ள ஆற்றல் பாதிக்கப்படுகின்றது. நம்பகத்தன்மை புரிதல் மற்றும் வணிக ரீதியிலான தொடர்புகள் வீழ்ச்சி அடைவதன் ஊடாக அவ்வாறானதொரு பாதக நிலைமை ஏற்படக்கூடும்.

அபிவிருத்தி லொத்தர் சபை கட்புல ஊடகங்கள் மற்றும் பொது நலன் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுவதன் காரணமாக சபை கணிசமானளவு நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலைக்கு உள்ளாகின்றது. இந்த இடர் வரும் நிலையை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை பொது நலனை தக்கவைத்துக் கொள்வதற்காக பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் கணிகங்களை நடைமுறைப்படுத்துவதுடன் பெருமளவில் முறைமை சார்ந்த வெளிப்படைத்தன்மையை பின்பற்றி செய்யப்படுகின்றது.

சட்டம் சார்ந்த இடர் வரு நிலைகள்

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய எதிர்கால சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் சட்டம் சார்ந்த பாதக நிலைமைகள் ஏற்படக்கூடிய இடர் வரும் நிலை அதிகரிக்கக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை அங்கீகாரமுடைய சட்ட தொழில்வாண்மையாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அவ்வாறான நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்வரு நிலைகள

தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற திட்டவட்டமான தும் காலோசிதமானதுமான தகவல்கள் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாட்டு செயல்முறைகளின் அடிப்படை அம்சமாகத் திகழ்கின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தனது தகவல் தொழில்நுட்ப முறைமையை மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

2020 டிசம்பர் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டிற்கான எமது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

கணக்காய்வுக் குழுவினர

கணக்காய்வுக் குழு பின்வரும் மூன்று (03) நிறைவேற்று பதவியல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது

1. திரு.எச்.ஜீ. சுமனசிங்க	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தலைவர்
2. திரு. ரவிந்ர ஜே.விமலவீர	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்
3. திருமதி ஜெனட் ஜயவர்தன (சட்டத்தரணி)	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்
4. திருமதி.ஜே.எம். பத்ரானி ஜயவர்தன	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்

பொது முகாமையாளர் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் - பிரதி பொது முகாமையாளர் - நீதி உள்ளகக் கணக்காய்வாளர் உதவி பொது முகாமையாளர் மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் ஏனைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் கணக்காய்வு அதிகாரி இக்குழுவில் அவதானிப்பாளாராக இக்கூட்டங்களில் பங்கேற்பார்.

கணக்காய்வு குழுவின் வகிபாகம

பங்கீடுபாட்டாளர்களின் கரிசனைகளையும சபைக்கு சொந்தமான சொத்துக்களையும் பாதுகாத்து கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணி வருதல் வேண்டும். நிதி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விடுக்கப்படும் வழிகாட்டுதல்களையும் குழு பின்பற்றுகின்றது. 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கணக்காய்வு குழுவினால் அதன் பிரதான பொறுப்புகளுக்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

1. ஆண்டுக்கான நிதி கூற்றுகளை வெளியிடுவதற்கு முன்னர் கூற்றுகளின் இசைந்தொழுகும் தன்மையையும் முழுமையையும் ஆராய்ந்தறிதல் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள முக்கியமான நிதி அறிக்கையிடல் கலை மீளாய்வு செய்தல். கணக்கீட்டு நியமங்கள் குறிப்புகள் வழக்கங்கள் தீர்மானங்கள் தேவைப்படுகின்ற பிரதான துறைகள் மற்றும் சட்ட அத்துடன் ஒழுங்குறுத்தல் தேவைகளுக்கு இசைந்தொழுகுவதை மீளாய்வு செய்தல் இதில் உள்ளடங்குகின்றன. நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதனூடாக கண்டறியப்பட்ட விடயங்களை மீளாய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தது.

2. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு உள்ளக கணக்காய்வு தொடர்பான காலத்துக்குரிய கணக்காய்வு அறிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக சபையின் இயங்கு நிலையில் காணப்படும் முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகளில் உள்ள குறைபாடுகள் வலியுறுத்தப்பட்டு சுட்டிக்காட்டப் படுவதுடன் விதப்புகைளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் தேவையான சந்தர்ப்பங்களில் தற்போது உள்ள நடைமுறைகள் மற்றும் செயல் ஒழுங்குகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு குழுவுக்கு முன்னேற்றம் அறிக்கை இடப்படுகின்றது. கணக்காய்வு குழுவிற்கு உள்ளக கணக்காய்வு மூலம் தொடர்ச்சியாக அறிக்கைகள் கிடைப்பதுடன் அக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமும் கண்டறியப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பான ஒரு சாராம்சமும் மேற்படி அறிக்கையில் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவத்தின் கருத்துக்களும் அதில் ஒரு பகுதியாக அமைவது உடன் கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளுக்கு காரணமாக அமையும் அடிப்படை விடயங்கள் மட்டும் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளும் குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

3. உள்ளக கணக்காய்வினதும் அரச கணக்காய்வினதும் உதவியுடன் குழு சபையின் தொழிற்படுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளின் பயனுறுதியை மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் செலவு, வருமான செயன்முறைகள் மூலதன செலவினத்திற்காக அனுமதி வழங்கும் வரம்புகள், கையொப்பமிடும் அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப உள்ளீடுகளின் கட்டுப்பாடு மற்றும் விருத்தி செய்தல், தாபனத்தின் கட்டமைப்பு, கொள்கைகள் கடமைகளை ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் உள்ளடங்குகின்றன. சபையின் நிதி நிலை கூற்றில் திரவத் தன்மை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது. அங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகள் தேவையான மேம்படுத்த ளுக்கான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் கொடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் மீது குழு விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

நடாத்தப்பட்ட கணக்காய்வு குழு கூட்டங்களின் எண்ணிக்கை

2019 ஆம் ஆண்டில் 5 கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதற்கு வருகை தந்தவர்கள் பின்வருமாறு.

பணிப்பாளரின் பெயர்	வருகை	வருகை தராமைக்கான அனுமதி
திரு. எச்.ஜீ சுமனசிங்க	03/03	இல்லை
திரு. அநுர திசாநாயக்க	01/01	இல்லை
திரு. ரவீந்ர விமலவீர	03/03	இல்லை
திருமதி.ஜெனட் ஜயவர்தன	04/03	01
திருமதி.ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன	03/02	01



(கையொப்பம்)

திரு.எச்.ஜீ.சுமனசிங்க

தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

நிதி அறிக்கை



உள்ளடக்கம்

சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை	38
கணக்காய்வு அறிக்கை - 2020 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்	50
விரிவான வருமானக் கூற்று	60
நிதி நிலைக் கூற்று	61
காசுப் பாய்வுக் கூற்று	62
உரிமைப் பங்குகளின் மாற்றம் பற்றிய கூற்று	63
கணக்கீட்டு கொள்கைகள்	64
பிரிவுசார் அறிக்கை	70
இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள்	72
பத்தாண்டு கால பொழிப்பு	84

சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

தலைவர்,
அபிவிருத்தி லொத்தர் சபை.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் அத்துடன் ஏனைய சட்ட ரீதியீலான தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

.....
டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

பிரதி:- செயலாளர், நிதி அமைச்சு.

தலைவர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிதிநிலை கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றம் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று ஆகியவற்றுக்கு ஏதுவான குறிப்புகள், பொழிப்புக்குட்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கிட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971ம் ஆண்டின் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழும் தாக்கத்தை தவிரந்த சபையின் 2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிதிநிலை மற்றும் அத்தினத்தில் நிறைவடைந்த ஆண்டுக்கான அதன் நிதி செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்வுகள் அரச கணக்கீட்டு நியமங்களின் தரநியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைகளை வெளிப்படுத்துகின்றதென்பதே எனது அபிப்பிராயமாக அமைகின்றது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ரூ. 7,514,727 கிரய பெறுமதியுடைய 5 வகையான சொத்துக்கள் அதன் கிரய பெறுமதியை விஞ்சும் வகையில் ரூ.78,698,220 தேய்மானத்திற்கு ஒதுக்கியதன் காரணமாக அந்த சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதி 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ.71,233,493 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பௌதீக ரீதியில் சபைக்கு சொந்தமாக இல்லாதிருந்த ரூ.8,095,000 பெறுமதியுடைய ஒரு கெப் வண்டியின் கிரயம் நிலையான சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமில்லாத ஒரு காணியில் ஒரு கட்டுமான பணிக்கு செலவு செய்யப்பட்ட ரூ.492,392 பணத் தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருப்பினும் அப்பணத்தொகை திஸ்ஸமகாராம பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்கவேண்டிய பணத்தொகையென அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆதனங்கள் இயந்திரத் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதியில் அத்தொகை மேலதிகமாக காட்டப்பட்டிருந்ததுடன் நடைமுறை சொத்துக்களும் அதே அளவில் குறைவாக காட்டப்பட்டிருந்தன.

(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு வாகனத்துடன் தொடர்புடையதாக தனியார் முகவர் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டியிருந்த ரூ.1,266,631 தொகை தொடர்பாக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த ஒரு வழக்கு மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கான பொறுப்பு நடைமுறை பொறுப்புகளிலிருந்து நீக்கப்படாமல் தொடர்ந்தும் நிதிநிலை கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(உ) டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி கூற்றுக்கு அமைவாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூ.1,246,717 தொகையாக இருந்த போதும் கணக்காய்வு காக வழங்கப்பட்ட அட்டவணையில் அம்மீதி ரூ.1,096,717 என காணப்பட்டது. இதற்கமைவாக ரு.150,000 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2009 டிசம்பர் 31 ஆம் திகதியில் 03 வங்கி கணக்குகளில் இருந்த ரூ.2,535,678 பெறுமதியுடைய இனங்காணப்படாத காசோலைகள் மற்றும் வைப்புகளை இனங்கண்டு கணக்குகளின் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2020 சனவரி 01 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய பிடித்து வைத்தல் வரி கணக்கின் மீதி ரூ.36,259,336 தொகையாக இருப்பினும் 2019 டிசம்பர் மாதத்துக்கு ஏதுவான ஒதுக்கம் ரு.35,900,655 தொகையாக இருந்தது. ஆரம்ப மீதியில் காணப்பட்ட மேற்படி ரு.358,681 வித்தியாசத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை என்பதுடன் மீளாய்வாண்டின் நிறைவிலும் இந்த வித்தியாசம் அவ்வாறாகவே இருந்தது.

(ஏ) சபை வொக்ஸ்ஹோல் வீதியில் 234 ஆம் இலக்கம் கொண்ட கட்டிடத்தை 2006 ஒக்டோபர் மாதம் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை தன்னிச்சையாக மீறியமை காரணமாக வைப்பு பணத்தொகையாகிய ரூ.723,780 மற்றும் அவ்வருடங்களுக்காக செலுத்தப்பட்ட வாடகை பணத்தின் ஒரு பகுதியாகிய ரூ.4,976,220 பணத் தொகை ஆகியவற்றின் மொத்தம் ரூ.5,700,000 தொகையினை 15 வருடகாலமாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

1.2.2 இணக்கம் செய்யப்படாத மீதி

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள பரிசுப்பொருள் வகைகளின் இருப்பு மற்றும் மேம்படுத்தல் பொருள் வகைகளின் இருப்பு ஆகியவற்றின் பெறுமதிகள் களஞ்சிய புத்தகங்கள் மற்றும் முகாமைத்துவ அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.1,544,912 வித்தியாசத்தை காட்டுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது பொறுப்பானது, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் பொருட்டு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானதும் பொருத்தமானதாகவும் அமைகின்றது என்பதே எனது நம்பிக்கையாகும்.

1.3 சபையின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆயினும், அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படுகின்றன. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவமே பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயத்தின் ஊடாக மேற்படி ஏனைய தகவல்கள் உள்வாங்கப்படுவதில்லை என்பதுடன் அது தொடர்பாக எவ்விதத்திலும் உறுதிகூறுதல் அல்லது அபிப்பிராயம் தெரிவித்தல் என்னால் மேற்கொள்ளப்படுவதில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏதுவாக, எனது கடப்பாடு யாதெனில், மேற்படி இனங்காணப்பட்ட தகவல்ககளை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் போது அதனை வாசித்தலும் அவ்வாறு வாசிக்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு முறையில் பெற்றக்கொண்ட எனது அறிவுக்கு எட்டிய வரையிலும் பொறுண்மையில் பொருந்தாதுள்ளதா என்பதை பரிசீலனை செய்வதாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களன் அடிப்படையிலும் எனது மதிப்பீட்டின் பிரகாரமும் மேற்படி ஏனைய தகவல்களில் பொறுண்மையில் பிறழ் கூற்றுக்கள் உள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து அவ்விடயத்தை அறிக்கையிடுவது எனது கடப்பாடாகும். ஆயினும், அவ்வாறு அறிக்கையிடுவதற்கு இவ்வறிக்கையில் எதுவும் காணக்கிடைக்கவில்லை.

சபையின் 2020 ஆம் ஆண்டறிக்கையினை வாசிக்கும் போது, அதில் பொறுண்மையில் பிறழ் கூற்றுக்கள் உள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து திருத்துவதற்காக நிர்வகிக்கும் தரப்புகளுக்கு அவ்விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அதனையடுத்தும், திருத்தப்படாமல் தவறாக காட்டப்பட்டிருக்குமாயின் அவற்றை அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்புகள் கொண்டுள்ள பொறுப்பு

இந்த நிதிக் கூற்று இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் அத்துடன் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையில் பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு ஆற்றல் கிட்டுவதற்காக தேவையாக அமையும் உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் ஆகியவை முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது நிறுவனத்தை இடையறாமல் பேணி வருவதற்கான ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன் நிறுவனத்தை கலைப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் தவிர இடையறாத இருப்பின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுதல் மற்றும் நிறுவனத்தின் இடையறாத இருப்புக்கு ஏதுவான விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு கட்டுப்படுத்தும் தரப்புகளினால் வகிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவுக்கு அமைவாக நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலத்துக்கு ஏதுவான நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் தங்களது சொந்த வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரியவாறு பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணி வருதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருண்மையில் பிறழ் கூற்றுக்களற்றதாக இருக்கின்றதென நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது குறிக்கோளாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றதெனினும் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருண்மையில் குறைவான வெளிப்படுத்தல்களை வெளிக்கொணர்கிறது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைவதில்லை. மோசடிகள் அல்லது தவறுகள் தனியான அல்லது கூட்டான வகையில் தாக்கம் விளைவிப்பதால் பொருண்மையில் குறைவான வெளிப்படுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதுடன் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இதன் பயன்படுத்துனர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கங்கள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்வாண்மை ரீதியிலான தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்வாண்மை ரீதியிலான ஐயப்பாடுகளுடன் கூடியதாக இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையில் தவறான கூற்றுக்களின் இடர்வரு நிலையை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்தலின் போது சந்தர்ப்பத்திற்கு

ஏற்றவாறு பொருத்தமான கணக்கீட்டு நடைமுறைகளை திட்டமிடுவதன் ஊடாக மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற இடர்வரு நிலைகளை தவிர்த்துக் கொள்ளுதல், போதுமான வகையிலும் பொருத்தமான வகையிலும் கணக்காய்வு ஆதாரங்களை பெற்றுக் கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. பொருண்மையில் தவறான கூற்றுக்களின் மூலம் ஏற்படக் கூடிய தாக்கங்களை பார்க்கிலும் மோசடியின் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கம் பாரதூரமாக இருப்பதுடன் மறை சூழ்ச்சி, போலி ஆவணங்களைத் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளின் கைவிடல்கள் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கான நோக்கத்தினாலன்றி, சந்தர்ப்பத்துக்கேற்றாற்போல், கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுதலின் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பாக புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் ஏற்புடையமை கணக்கிட்டு மதிப்பீடுகளினதும் நியாயம் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களின் பாராட்டப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இடையறாத இருப்பு தொடர்பாக பொருண்மையின் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா எனும் விடயம் தொடர்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிட்டு ஆதாரங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத இருப்பு தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்திக் கொள்வதின் ஏற்புடையத் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதென என்னால் தீர்மானிக்கப்படுமாயின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக காணப்படும் வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக அமையாத போது எனது கருத்தினை சிறிது மாற்றியமைத்துக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைகளின் அடிப்படையில் இடையறாத இருப்பு முடிவுக்கு வரக்கூடும்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான வகையிலும் நீதியான முறையிலும உள்ளடங்கியுள்ளதென வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாடுகளின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் தரப்புகள் விழிப்புணர்வூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது சோதனைகளின் மூலம் காணக்கூடிய வகையில் உரியவாறு நிதி அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிவரப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் (6) (1) (ஈ) பிரிவில் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இசைந்தொழுகுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (�ை) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் என்னால் விதப்புரை செய்யப்பட்டுள்ள விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும் பின்வரும் கூற்றுக்களை முன்வைப்பதற்கு நேர்ந்திடும் வகையிலான எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் எவரேனும் அங்கத்தவருடன் சபை தொடர்புகளை பேணி எவ்வித ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் நேரடியாகவோ வேறு வழிமுறைகளின் ஊடாகவோ பொதுவான தொழில் முயற்சி நிலைகளுக்கு புறம்பாக தொடர்பு காணப்படுகின்றது எனும் விடயம்,

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்பை தவிர்ந்த ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டம் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் விடுக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாத வகையில் நடந்து கொண்டுள்ளதாக

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு

அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 17 (5) ஆம் பிரிவு

வெற்றியாளர்கள் உரிமை கோராத ஆறுமாத காலம் கடந்த பரிசுப் பொருட்களை விற்பனை செய்வதன் ஊடாக கிடைக்கும் பணத் தொகையை முதலாவதாக நிதியத்திலும் அதனை அடுத்து சனாதிபதி நிதியத்திலும் வரவு வைக்க வேண்டுமெனினும் 2020 பெப்ரவரி 12 ஆம் திகதியாகின்ற போது ஆறு மாதங்கள் கடந்த ரூ.1,428,172 பெறுமதியுடைய 11 பரிசு பொருள் வகைகளுக்கு ஏதுவான 162 பொருட்களை விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த பணத் தொகையை சனாதிபதி நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஒஜஏ அத்தியாயத்தின் பிரிவு 08

அரச நிறுவனங்களில் களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுக்கான கடமை பணிகளை நிறைவேற்றும் பொருட்டு பயன்படுத்தும் வாகனங்களுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூபாய் 12 செலுத்தக் கூடியதாக இருப்பினும் ஒரு கிலோமீட்டர் பாவனைக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர்களுக்கு சபை ரூ.40 செலுத்தி இருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிக்கோவையின் நிதி பிரமாணக் கோவை 381

உத்தியோகபூர்வ வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு திறைசேரியிடம் (அரச கணக்குகள் திணைக்களத்திடம்) விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அபிவிருத்தி லொத்தர் சபை எனும் பெயரில் 02 அரச வங்கிகள் மற்றும் 02 தனியார் வங்கிகளில் பேணி வரப்பட்ட 11 நடைமுறை கணக்குகளுக்கு அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. மேற்படி நடைமுறை கணக்குகள் வெறுமனே பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

(ஈ) 2018 நவம்பர் 14 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் (2) பந்தி

அரச வங்கிகளுக்கு புறம்பாக 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் ரூ.5,486,920 சபைக்க சொந்தமான பணத்தொகை ஒரு தனியார் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு அதன் ஊடாக திறைசேறி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2008 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய வரவுசெலவு திட்ட சுற்றுநிருபம் இலக்கம் 142 இன் 5.2 ஐஐஐ ஆம் பந்தி

சபை 144 உத்தியோகத்தர்களுக்கு ரூ.250,000 விஞ்சியதாக ரூ.10,011,540 தொகையினை இடர் கடனாக செலுத்தியுள்ளதென அவதானிக்கப்பட்டது. மேலும், கொவிட் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பாதக பொருளாதார நிலையினை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இடர் கடன் தொகைக்கு சமாந்தரமாக அடிப்படை சம்பளத்திற்கு சமனானதொரு பணத்தொகையினை கடனாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறித்ரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இசைந்தொழுகாத வகையில் பணியாற்றியுள்ளமை

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புகளை தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும், பயனுறுதிமிக்க வகையிலும், வினைத்திறன்மிக்க வகையிலும் சம்பந்தப்பட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படாமை

(அ) தினசரி சீட்டிழுப்பு நடத்தப்படும் லொத்தர் சீட்டுகளில் சீட்டிழுப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில் விநியோகிப்பதற்கு விற்பனை முகவர்களுக்கு சபையினால் வழங்கப்பட்டிராத லொத்தர் சீட்டுகள் காணப்படுதல் மற்றும் துணை களஞ்சியங்களினால் சம்பந்தப்பட்ட செலவுறுதிச் சீட்டுகளுக்கு அமைவாக சரியான பார்கோட் கொண்ட லொத்தர் சீட்டுகள் வழங்கப்படாமை போன்ற ஏதேனும் குறைபாடு காரணமாக பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மேற்படி சீட்டுகள் சம்பந்தப்பட்ட பிரதிநிதியின் விற்பனையாக கருதி கணினி தொகுதிக்கு உள்வாங்கப்பட்டு சீட்டிழுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இதற்கு உதவி பொது முகாமையாளரின் (நிதி) அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் சீட்டிழுப்பிற்கு பின்னர் சம்பந்தப்பட்ட முகவரின் எழுத்திலான கோரிக்கையினை பெற்றுக்கொண்ட பின்னர் இந்த சீட்டுகளின் பார்கோடுகளுக்கு ஏதுவான பரிசுகளை இடை நிறுத்துதல், பின்னர் அதனை அகற்றுதல், மற்றும் முகவர்களுக்கு மீண்டும் பணத்தை செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் முறையான அனுமதியில்லாமல் உதவி பொது முகாமையாளரினாலேயே (நிதி) மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் அவ்வாறான 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் விற்பனை பெறுமதி ரூ.307,861 ஆக அமைந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அச்சகங்களில் இருந்து மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை 31,779,000 இருந்ததுடன் களஞ்சியசாலையிலிருந்து விடுவிக்கப்படாமல் மீதமிருந்த சீட்டுகளின் எண்ணிக்கை 1,255,570 ஆகும். மேலதிகமாக கோரப்பட்ட சீட்டுகளின் வீதமாக நோக்குகையில் இந்த எண்ணிக்கை நூற்றுக்கு 4 வீதமாக இருந்ததுடன் அத கோடிபதி லொத்தர் சீட்டுகளில் இந்த வீதம் நூற்றுக்கு 6 வீதமான உயர்ந்த அளவினை கொண்டிருந்தது. சீட்டுகளுக்கான அனுப்பற் கட்டளை முன்வைக்கும் நடவடிக்கை உரிய முகாமைத்துவத்துடன் கூடியதாக இடம்பெறுவதில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2018 ஆம் ஆண்டில் ரூ.5,565,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட சுநயச டிழனல அற்ற னுழரடிடந றூாநநட க்ரூ கெப் வண்டியை விற்பனைப் பிரச்சார வாகனமாக மாற்றியமைப்பதற்கு 2018 அக்டோபர் 18ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2020 டிசம்பர் 30 ஆம் திகதியில் 2 வருட காலத்தையும் விட அதிகமான காலம் கடந்து இருந்தாலும் சபை எதிர்ப்பார்த்த குறிக்கோள் அடையப்படவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6 பிரிவின் ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாமல் அளவு முறைகள் தயாரிக்கப்பட்டு விலைமனு கோரப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்த நிறுவனத்தின் அனுமதியின்றி நவீனமயப்படுத்த பட்டிருந்தது. மேலும், இந்த பணிக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் ஒரு வருட உத்தரவாத காலம் முடிவடைதல், சொத்துக்கள் மற்றும் அதன் உதிரி பாகங்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை, மற்றும் செயல் நிறைவேற்று பினைப் பொறுப்பின் செல்லுபடியாகும் காலம் கடந்து இருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் ரூ.11,991,900 செலவு உறப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இந்த தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சிக்கல்மிக்கதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையின் பிரதானமானதொரு தொழிற்பாடாக அமையும் லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பணி 2017 ஆம் ஆண்டு முதல் ஒரு முறை சார்ந்த பெறுகைகள் திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளபட்டிருக்கவில்லை என்பதுடன் நடைமுறையில் உள்ள ஒப்பந்த காலம் நிறைவடைவதற்கு நெருங்கிய பின்னர் பெறுகைகள் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. பொதுவாக சுமார் ஆறு மாதங்கள் பெறுகை செயன்முறை இடம்பெறுவதுடன் இதன் காரணமாக நடைமுறையில் உள்ள ஒப்பந்த காமும் 06 மாதம் முதல் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் இற்றைவரை இரண்டு அச்சு நிறுவனங்கள் மாத்திரம் இதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

2.3 பிற கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) ஒரு முறைசார்ந்த திட்டம் இல்லாமல் மேம்படுத்தல் பொருள் வகைகள் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூ.3,623,367 பெறுமதியான மேம்படுத்தல் பொருள் வகைகள் குடை (ஆண்), டீ சர்ட், சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், தொப்பிகள், போசிலேன் செட்ஸ், நீர் வடிகட்டிகள் போன்றவை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபையின் மேம்படுத்தல் பொருட்களுக்கான அனுப்பற் கட்டளைகளை மீண்டும் முன்வைத்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப் படுவதாக அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 2019 அக்டோபர் 24ஆம் தேதி லொத்தர் சீட்டுகளின் பரிசு முறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நடைபெற்ற கூட்டத்தின்போது களஞ்சியசாலையில் இருக்கும், வெற்றி பெற்றவர்களினால் கோரப்படாத ஆறு மாதங்கள் கடந்த பரிசுகளை எதிர்வரும் போட்டிகளில் பயன்படுத்திக் கொள்வதற்கு சபை தீர்மானித்திருந்தது. இதற்கமைவாக, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.529,850 பெருமதியான 02 மோட்டார் சைக்கிள்கள் 2019 டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி லொத்தர் சீட்டிழுப்பின் பரிசாகவும் 2020 பெப்ரவரி லக்கின அதிர்ஷ்டம் விசேட சீட்டிழுப்பு பரிசாகவும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதி பொது முகாமையாளருக்கு (சந்தைப்படுத்தல்) ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் மேற்படி இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கணக்காய்வு செய்யப்பட்ட 2019 பெப்ரவரி 12ஆம் திகதியும் களஞ்சியசாலையில் இருப்பதை பௌதீக ரீதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(ஈ) பயன்படுத்தப்படாமல் தக்க வைக்கப்பட்டிருந்த ரூ.592,500 பெறுமதியுடைய 123எ பரிசு வவுச்சர்கள் 12 வருட காலமாக சபையினால் பயன்படுத்தப்படாமல் தக்கவைத்துக் கொள்ளப் பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவற்றில் ரூ.7500 பெறுமதியுடைய 07 வவுச்சர்கள் 2019 ஆகஸ்ட் 31ஆம் திகதி காலாவதியாகி இருந்தன. மேலும், ரூ.585,000 பெறுமதியுடைய ரூ.5000 117 வவுச்சர்கள் காணப்பட்டதுடன், இந்த வவுச்சர்களின் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை எனினும் அவை 2009 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட வவுச்சர்களாக இருந்ததால் 12 வருடங்கள் கடந்திருந்தன. ஆகவே, எதிர்கால பரிசு வழங்கும் நடவடிக்கைகளில் இந்த வவுச்சர்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு நிச்சயமற்ற தன்மை உடையதாகவே இருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2020 ஜனவரி மாதம் 30ஆம் தேதி பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக சூப்பர் போல் விசேட சீட்டிழுப்புக்கான ஸ்கூட்டிகளை வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்ட கேட்புவிலை முன்வைத்தவர்களுக்கு அன்றைய தினமே பொருட்களை அனுப்புவதற்கான கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும், பெறுகைகள் வழிகாட்டி

கோவையின் 8.7.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான விலைக் கேள்வியின் செல்லுபடியாகும் காலத்துக்குள்ளேயே ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு உடனேயே ஏற்றுக்கொள்ளுதல் கடிதம் வழங்குனருக்கு வழங்கப்படவில்லை. பெறுகை வழிகாட்டு நெறிகள்.4.10 பிரகாரம் செயல் நிறைவேற்று பினைப் பொறுப்பினை சமர்ப்பிப்பதற்கும் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) சபை 3,275,246 செலவினை மேற்கொண்டு Sweep App ஊடாக லொத்தர் டிக்கெட்டுகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருந்தாலும் ஒரு தனியார் நிறுவனத்தினால் அச்சிடப்பட்ட லொத்தர் டிக்கெட்டுகளை அந்த வசதிகளின் ஊடாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. மேலும், அச்சு இயந்திரங்கள் எதுவும் இல்லாமை மற்றும் அச்சு தவறுகளுடன் கூடியதாக தொடர்ச்சியாக லொத்தர் டிக்கெட்டுகளை அச்சிட்டு இருத்தல் ஆகிய குறைபாடுகள் இருந்தும் அந்த நிறுவனத்தை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நிறுவனமாக ஏற்றுக்கொள்ளுதல் கணக்காய்வின் போது கேள்விக்குரிய விடயமாக அமைந்தது.

(ஊ) பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை லொத்தர் சீட்டு அச்சிடுதலின் போது சபைக்கு செலவிட நேர்ந்த மொத்த மேலதிக செலவு ரூ.72,479,000 ஆகும்.

(எ) விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் பயன்படுத்திய ரூ.1,352,610.58 கிரயம் கொண்ட 07 மோட்டார் சைக்கிள்கள் 02 மாதம் 11 மாதத்திற்கு அதிகமான காலம் அலுவலக வளவில் வாகன தரிப்பிடத்தில் பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஏ) சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் மோட்டார் வண்டிகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 37 வாகனங்கள் சபையின் நிலையான சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியை நோக்குமிடத்து கொவிட் தொற்று பரவியதன் காரணமாக சபையின் விற்பனை வருமானம் 2019 ஆம் ஆண்டின் அக்கால பகுதியுடன் ஒப்பிடும்போது ரூ. 3,124,722,840 தொகை அல்லது நூற்றுக்கு 45% வீதம் வீழ்ச்சி அடைந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(ஒ) பரிசுப்பொருள் வகைகளில் கொள்வனவு செய்து 02 வருடங்கள் கடந்துள்ள ரூ.548,224 பெறுமதியான 08 செல்லிடத் தொலைபேசிகள் 04 டெப் கணினிகள் ஆகியவை 04 வருட உத்தரவாத காலத்தை கடந்திருந்ததுடன் ரூ.32,510 பெறுமதியான 02 மவுண்டன் சைக்கிள்கள் மற்றும் பலகையிலான தொலைக்காட்சிப் பெட்டியை வைப்பதற்கான சட்டம் ஆகியவை பயன்படுத்த முடியாத வகையில் இருக்கின்றதென பௌதீக சோதனையின்போது

அவதானிக்கப்பட்டது. இதில், 03 தொலைபேசிகள், 04 டெப் கணினிகள், 02 மவுண்டன் சைக்கிள்கள் 2019 ஆம் ஆண்டின் பண்ட ஆய்வு மதிப்பீட்டின் போது விற்பனைக்கு இனங்காணப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியாகிய 2021 பெப்ரவரி 12ஆம் தேதியாகின்ற போதும் அப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் களஞ்சியசாலையில் இருந்த பயன்படுத்தப்படாத, ஆயினும், பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் இருந்த ரூ.505,407 பெறுமதியுடைய 10 மேம்படுத்தல் பொருள் வகைகளைச் சேர்ந்த 119 பொருட்களை ஏல விற்பனைக்கு விடுவதற்கு கட்டுப்பாட்டு பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் ரூ.325,954 பெறுமதியுடைய 07 வகைகளுக்கு ஏதுவான 76 பொருட்களை ஏல விற்பனையில் விற்பனை செய்து 2020ஆம் ஆண்டில் ரூ.38,954 தொகை ஈட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக பயன்படுத்தப்படாத மேம்படுத்தல் பொருள் வகைகள் காரணமாக ரூ.286,615 அதாவது நூற்றுக்கு 88 வீதமான நட்டம் சபைக்கு ஏற்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஔ) சபை 1990 ஆம் ஆண்டு வோர்ட் பிளேசில் ஒரு நபருடன் ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்நபருக்கு வழங்கியிருந்த ரூ.2,520,000 கட்டிட வாடகை வைப்புத்தொகையை மீண்டும் அறவிட்டுத் தருமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடுத்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆம் தேதி கிடைத்ததுடன் அதன் பிரகாரம் பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டு இருந்தாலும் அத் தீர்ப்பு கிடைத்து சுமார் 05 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அப் பணத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) 2013ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் ரூ.2,877,144 மற்றும் 2014ஆம் ஆண்டில் ரூ.749,583 என மொத்தமாக ரூ.3,626,727 பணத் தொகை ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஆலோசனை கட்டணத்தின் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. 7 - 8 வருட காலம் ஒரு வெளித் தரப்பின் வசம் வைக்கப்பட்டிருந்த இப்பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ங) 2020 டிசம்பர் 31-ஆம் தேதி சபைக்கு சொந்தமான மொத்தம் ரூ.270,749,417 பணத் தொகை உடனடி வைப்புக் கணக்கில் வைப்பீடு செய்யப்படாமல் 06 நடைமுறை கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.



டபிள்யூ. பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்		சபையினால் வழங்கப்படுகின்ற பதில்கள்
1.2.1	கணக்கீட்டு குறைபாடுகள்	
(அ)	ரூ. 7,514,727 கிரய பெறுமதியுடைய 5 வகையான சொத்துக்கள் அதன் கிரய பெறுமதியை விஞ்சும் வகையில் ரூ.78,698,220 தேய்மானத்திற்கு ஒதுக்கியதன் காரணமாக அந்த சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதி 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ.71,233,493 குறைவாக காட்டப்பட்டிருந்தது	சொத்துக்களின் கிரயம் மற்றும் தேறிய புத்தக பெறுமதி நிதி கூற்றில் குறிப்பு இலக்கம் 11 இல் கீழ் திருத்தம் செய்து காட்டப்பட்டுள்ளது..
(ஆ)	பௌதீக ரீதியில் சபைக்கு சொந்தமாக இல்லாதிருந்த ரூ.8,095,000 பெறுமதியுடைய ஒரு கெப் வண்டியின் கிரயம் நிலையான சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	சபைக்கு சொந்தமாக இல்லாவிடினும் ரூ.8,095,000/- பெறுமதியுடைய கெப் வண்டியை கொள்வனவு செய்து சபையின் பெயரில் பதிவு செய்துள்ளதுடன் அதற்கான பணத்தொகை "யுனைட்டட் மோட்டர்ஸ்" நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதால் அது நிறுவனத்தின் சொத்தாக கருதப்பட்டு அதன் கிரயம் நிலையான சொத்துக்களின் கீழ் தரப்பட்டுள்ளது. இந்த வாகனத்துக்கு செலுத்தப்பட்ட கிரயம் வாகனத்தைக் கொண்டு சென்ற தரப்பிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(இ)	சபைக்கு சொந்தமில்லாத ஒரு காணியில் ஒரு கட்டுமான பணிக்கு செலவு செய்யப்பட்ட ரூ.492,392 பணத் தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருப்பினும் அப்பணத்தொகை திஸ்ஸமகாராம பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்கவேண்டிய பணத்தொகையென அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆதனங்கள் இயந்திரத் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதியில் அத்தொகை மேலதிகமாக காட்டப்பட்டிருந்ததுடன் நடைமுறை சொத்துக்களும் அதே அளவில் குறைவாக காட்டப்பட்டிருந்தன.	இந்த காணிக்கு உறப்பட்ட கிரயம் ரூ.492,392/- பணத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு முயற்சி செய்யப்பட்டாலும் திஸ்ஸமஹராம பிரதேச செயலாளர் அரசுக்கு சொந்தமான காணியை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினை மீண்டும் அறவிட்டு தருவதற்கு வாய்ப்பில்லை என அறிவித்துள்ளார். இதற்கமைவாக அந்த பணத்தொகையை பதிவழிப்பு செய்வதற்கு 2021 ஆம் மார்ச் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற 248 ஆம் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்கமைவாக, 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கணக்குகளில் இருந்து ரூ.492,392/- தொகையினை வெட்டி விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு வாகனத்துடன் தொடர்புடையதாக தனியார் முகவர் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டியிருந்த ரூ.1,266,631 தொகை தொடர்பாக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த ஒரு வழக்கு மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கான பொறுப்பு நடைமுறை பொறுப்புகளிலிருந்து நீக்கப்படாமல் தொடர்ந்தும் நிதிநிலை கூற்றில் காட்டப்பட்டிருந்தது.	PB – 6024 எனும் இலக்கமுடைய ஒரு கேப் வண்டி தொடர்பில் யுனைட்டட் மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த 8,095,000 பணத் தொகைக்கான வட்டியாக பத்து வருடங்களுக்கு 10 % வீதம் ரூ.8,095,000 மேலதிக பணத்தொகை 2018ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும் இதற்கான வட்டியாக ரூ.6,828,368.83 பணத் தொகையை மாத்திரம் செலுத்த நேரிட்டுள்ளதாக கட்டுப்பாட்டு பிரிவு 2021.3.10 ஆம் திகதி கணக்குப் பிரிவுக்கு கடிதம் ஒன்றின் வாயிலாக அறிவித்துள்ளதுடன் 2021 மார்ச் மாதத்தில் இந்த சட்ட கட்டணத்தை ஒதுக்குவதற்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது
(உ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி கூற்றுக்கு அமைவாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூ.1,246,717 தொகையாக இருந்த போதும் கணக்காய்வு காக வழங்கப்பட்ட அட்டவணையில் அம்மீதி ரூ.1,096,717 என காணப்பட்டது. இதற்கமைவாக ரு.150,000 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. Employee Contribution பதிவிட படவேண்டிய ரூ. 150,000 பணத்தொகை Staff Loan Recovery Covid 19 என குறிப்பிடப்படுதல் நடப்பாண்டின் கணக்கில் திருத்தப்பட்டுள்ளதுடன் அட்டவணை இலக்கம் 1 இற்கு அமைவாக இறுதி மீதியில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.
(ஊ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் 03 வங்கி கணக்குகளில் இருந்த ரூ.2,535,818 பெறுமதியுடைய இனங்காணப்படாத காசோலைகள் மற்றும் வைப்புகளை இனங்கண்டு கணக்குகளின் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	
(எ) 2020 சனவரி 01 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய பிடித்து வைத்தல் வரி கணக்கின் மீதி ரூ.36,259,336 தொகையாக இருப்பினும் 2019 டிசம்பர் மாதத்துக்கு ஏதுவான ஒதுக்கம் ரு.35,900,655 தொகையாக இருந்தது. ஆரம்ப மீதியில் காணப்பட்ட மேற்படி ரு.358,681 வித்தியாசத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை என்பதுடன் மீளாய்வாண்டின் நிறைவிலும் இந்த வித்தியாசம் அவ்வாறாகவே இருந்தது.	வினியோக விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகளினால் சபைக்கு டிக்கெட் விற்பனைக்கும் ஏனைய விசேட கொடுப்பனவுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட பண வைப்பு உரிய முறையில் இனங்காணப்படாமல் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக இந்த பிரச்சனை தோன்றியுள்ளது. அவற்றில் 6 மாதங்களை கடந்த இனங்காணப்படாத வைப்புகள் சபையின் ஏனைய வருமானமாக கணக்கு வைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சபையின் கணக்குகளுக்கு பணத்தை வைப்பு செய்யும்போது வைப்பினை அடையாளம் காண்பதற்கு இயலும் வகையில் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்கள் விற்பனை முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஏ) சபை வொக்ஸ்வோல் வீதியில் 234 ஆம் இலக்கம் கொண்ட கட்டிடத்தை 2006 ஒக்டோபர் மாதம் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை தன்னிச்சையாக மீறியமை காரணமாக வைப்பு பணத்தொகையாகிய ரூ.723,780 மற்றும் அவ்வருடங்களுக்காக செலுத்தப்பட்ட வாடகை பணத்தின் ஒரு பகுதியாகிய ரூ.4,976,220 பணத் தொகை ஆகியவற்றின் மொத்தம் ரூ.5,700,000 தொகையினை 15	2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் கணக்குகளின் ஊடாக திருத்தப்பட்டுள்ளது வொக்ஸ்சோல் வீதியில் 234 ஆம் இலக்க கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய ரூ.5,700,000/- தொகையை மீண்டும் அறவிட்டுக்கொள்ளுதல் தொடர்பாக அல்லது பதிவழித்தல் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளரினால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு 04 சந்தர்ப்பங்களில் கூடி இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து இறுதி

வருடகாலமாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	அறிக்கையை நிதி அமைச்சின் செயலாளருக்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. இதற்கமைவாக நிதி அமைச்சின் செயலாளரினால் எதிர்வரும் காலத்தில் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
1.2.2 இணக்கம் செய்யப்படாத மீதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள பரிசுப்பொருள் வகைகளின் இருப்பு மற்றும் மேம்படுத்தல் பொருள் வகைகளின் இருப்பு ஆகியவற்றின் பெறுமதிகள் களஞ்சிய புத்தகங்கள் மற்றும் முகாமைத்துவ அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.1,544,912 வித்தியாசத்தை காட்டுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.	கணக்குப் பிரிவிலும் களஞ்சியசாலையிலும் உள்ள பரிசுகள் மற்றும் மேம்படுத்தல் இருப்புகள் பேரேட்டின் உருப்படிகள் அளவின் அடிப்படையில் சரியாக இருந்தபோதும் அவற்றின் பெறுமதியில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களில் மொத்த உருப்படிகளின் பெறுமதி FIFO கணக்கு கொள்கைக்கு அமைவாக கணிப்பிடப்படுகின்றது.
<u>2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை</u> 2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் குறித்துரைக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்பை தவிர்ந்த ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டம் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் விடுக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகாத வகையில் நடந்து கொண்டுள்ளதாக	
<u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு</u> ----------	**அவதானிப்புக்கள்** ----------
(அ) அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 17 (5) ஆம் பிரிவு	வெற்றியாளர்கள் உரிமை கோராத ஆறுமாத காலம் கடந்த பரிசுப் பொருட்களை விற்பனை செய்வதன் ஊடாக கிடைக்கும் பணத் தொகையை முதலாவதாக நிதியத்திலும் அதனை அடுத்து சனாதிபதி நிதியத்திலும் வரவு வைக்க வேண்டுமெனினும் 2020 பெப்ரவரி 12 ஆம் திகதியாகின்ற போது ஆறு மாதங்கள் கடந்த ரூ.1,428,172 பெறுமதியுடைய 11 பரிசு பொருள் வகைகளுக்கு ஏதுவான 162 பொருட்களை விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த பணத் தொகையை சனாதிபதி நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	இதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைத்துள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணத் தொகையை பயன்படுத்தி மீண்டும் சீட்டிழுப்புக்கு பரிசில்களை பெற்றுக் கொள்ளும்போது அதற்கான சம்பந்தப்பட்ட பரிசு பெருனர்கள் முன்வராத சந்தர்ப்பங்களில் அப்பரிசின் விற்பனையின் பின்னர் கிடைக்கும் பணத்தை மீண்டும் பரிசு ஒதுக்கத்துக்கான கணக்கில் வரவு வைத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக மேற்படி பரிசு உருப்படிகளின் ஒரு பகுதியினை அகற்றுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறு இல்லாவிடின் மேற்படி பரிசுகள் எதிர்வரும் பிரச்சார நிகழ்ச்சிகளின்போது பரிசுப் பொருட்களாக பயன்படுத்த முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. மீதமாக உள்ள பகுதியை (மோட்டார் சைக்கிள்கள்) மீண்டும் பரிசில்களாக வழங்குவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIV அத்தியாயத்தின் பிரிவு 08	அரச நிறுவனங்களில் களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுக்கான கடமை பணிகளை நிறைவேற்றும் பொருட்டு பயன்படுத்தும் வாகனங்களுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூபாய் 12 செலுத்தக் கூடியதாக இருப்பினும் ஒரு கிலோமீட்டர் பாவனைக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர்களுக்கு சபை ரூ.40 செலுத்தி இருந்தது.	வேறு நிறுவனங்களின் களப் பணிகளில் ஈடுபடுகின்ற ஆளணி போலன்றி சபையின் களப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் அனைத்து சந்தர்ப்பத்திலும் களத்தில் பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு தலையிட நேரிடுவதால் அவர்களுக்கு தொடர்ச்சியாக களப் பணிகளில் ஈடுபட நேரிடுகின்றது. மேலும், ஒரு களப்பணியாளர் கடமையாற்ற வேண்டிய புவியியல் பிரதேசம் விசாலமானதாகும். ஆகவே, மேற்படி விடயங்களின் அடிப்படையில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 40/- கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த மோட்டார் வண்டிகள் அவர்களின் மோட்டார் வண்டிகளாக இருப்பதால் இந்த வண்டிகளின் கிரயமும் அந்த வண்டிகளை செலுத்துபவர்களாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே இருப்பதால் சாரதிக்கான கிரயமும் இந்த 40/- ரூபாவில் உள்ளடங்குகிறது. மேலும், இந்த ரூ. 40/- தீர்மானிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் நிலவிய எரிபொருள் விலையின் அடிப்படையில் அப்போதைய வாடகை வண்டி சேவைகளை வழங்கும் நிறுவனங்களிலிருந்து விலைமனு கோரப்பட்டு அவர்கள் ஒரு கிலோமீட்டருக்கு அறவிடும் விலையும் 40 ரூபாவை விட அதிகமாக இருந்ததால் 40 ரூபா வழங்குதல் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக இதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது.
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிக்கோவையின் நிதி பிரமாணக் கோவை 381	உத்தியோகபூர்வ வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு திறைசேரியிடம் (அரச கணக்குகள் திணைக்களத்திடம்) விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அபிவிருத்தி லொத்தர் சபை எனும் பெயரில் 02 அரச வங்கிகள் மற்றும் 02 தனியார் வங்கிகளில் பேணி வரப்பட்ட 11 நடைமுறை கணக்குகளுக்கு அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. மேற்படி நடைமுறை கணக்குகள் வெறுமனே பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.	அபிவிருத்தி லொத்தர் சபை ஒரு பணிப்பாளர் சபையினைக் கொண்ட சுயாதீனமான நிதி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் நிறுவனமாகும். ஆகவே, ஏதேனும் கடமை பணிக்கு சபைக்கு ஏதேனும் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கு தேவையாயின் அதற்கு தேவையான வரைவினை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக்கொண்டு அக் கணக்கினை அரசு அல்லது வணிக வங்கி ஒன்றில் ஆரம்பித்து பேணி வருதல் இற்றைவரை பின்பற்றப்பட்ட நடைமுறையாகும். இந்த கணக்காய்வு ஐய வினாவில் 11 கணக்குகளும் அந்த நடைமுறைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள் ஆகும். மேலும், மேற்படி அபிவிருத்தி லொத்தர் சபை பணிப்பாளர் சபையில் நிதி அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பணிப்பாளரும் உள்ளதால் அவர் உள்ளிட்ட ஏனைய அங்கத்துவ பணிப்பாளர்களின் முழுமையான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதையடுத்து இந்த கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன.
(ஈ) 2018 நவம்பர் 14 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் (2) பந்தி	அரச வங்கிகளுக்கு புறம்பாக 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் ரூ.5,486,920 சபைக்க சொந்தமான பணத்தொகை ஒரு தனியார் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு அதன் ஊடாக திறைசேறி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது	மாவட்ட விற்பனை பிரதிநிதிகளின் நாளாந்த வைப்புகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வைப்புகளின் அளவுகளை அவதானித்து இந்த கணக்கை தொடர்ந்தும் பேணி வருவதா என்பதைப்பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

(உ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2008 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய வரவுசெலவு திட்ட சுற்றுநிருபம் இலக்கம் 142 இன் 5.2 III ஆம் பந்தி	சுபை 144 உத்தியோகத்தர்களுக்கு ரூ.250,000 விஞ்சியதாக ரூ.10,011,540 தொகையினை இடர் கடனாக செலுத்தியுள்ளதென அவதானிக்கப்பட்டது. மேலும், கொவிட் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பாதக பொருளாதார நிலையினை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இடர் கடன் தொகைக்கு சமாந்தரமாக அடிப்படை சம்பளத்திற்கு சமனானதொரு பணத்தொகையினை கடனாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அபிவிருத்தி லொத்தர் சபை ஆரம்பம் முதல் இற்றைவரை இந்த நடைமுறையின் கீழ் ஊழியர்களை அகத் தூண்டுவதற்காக இடர் கடன்களை வழங்கியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று தொடங்கிய முதல் கட்டத்தில் 2020 மார்ச் மாதம் 18ஆம் திகதி முதல் 12ஆம் தேதி வரை நாட்டை மூடிவைத்த காரணத்தினால் சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் அக்காலகட்டத்தில் செயற்படவில்லை. ஆகவே, பணியாளர்களின் வருமானம் குறைந்ததால் அவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் அதற்கான கடன் முற்பணம் ஒன்றை வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்தாலும் அதனை வழங்குதல் நிராகரிக்கப்பட்டது. ஆயினும் தொடர்ச்சியாக வேண்டுகோள் முன் வைத்தல் மற்றும் அவர்களின் கடும் எதிர்ப்பு ஆகியவற்றின் மத்தியில் வேண்டுகோள் விடுக்கப் பட்ட முற்பணத் தொகையைவிட குறைந்த ஆயினும் அடிப்படை சம்பளத்துக்கு சமமான ஒரு பணத்தொகையை வழங்க நேரிட்டது. இதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணத்திற்கு ஏதுவான அனைத்து பணத்தையும் அறவிடப்பட்டுள்ளது. இந்த முற் பணத்தை வழங்குவதற்கு நிதியமைச்சின் அல்லது அரச தொழில் முயற்சியை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான முற்பணத்தொகை ஒன்றை வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறித்ரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இசைந்தொழுகாத வகையில் பணியாற்றியுள்ளமை

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புகளை தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும், பயனுறுதிமிக்க வகையிலும், வினைத்திறன்மிக்க வகையிலும் சம்பந்தப்பட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படாமை

(அ) தினசரி சீட்டிழுப்பு நடத்தப்படும் லொத்தர் சீட்டுகளில் சீட்டிழுப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில் விநியோகிப்பதற்கு விற்பனை முகவர்களுக்கு சபையினால் வழங்கப்பட்டிராத லொத்தர் சீட்டுகள் காணப்படுதல் மற்றும் துணை களஞ்சியங்களினால் சம்பந்தப்பட்ட செலவுறுதிச் சீட்டுகளுக்கு அமைவாக சரியான பார்கோட் கொண்ட லொத்தர் சீட்டுகள் வழங்கப்படாமை போன்ற ஏதேனும் குறைபாடு காரணமாக பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மேற்படி சீட்டுகள் சம்பந்தப்பட்ட பிரதிநிதியின் விற்பனையாக கருதி கணினி தொகுதிக்கு உள்வாங்கப்பட்டு சீட்டிழுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இதற்கு உதவி பொது முகாமையாளரின் (நிதி) அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் சீட்டிழுப்பிற்கு பின்னர் சம்பந்தப்பட்ட முகவரின் எழுத்திலான கோரிக்கையினை பெற்றுக்கொண்ட பின்னர் இந்த சீட்டுகளின் பார்கோடுகளுக்கு ஏதுவான பரிசுகளை இடை நிறுத்துதல், பின்னர் அதனை அகற்றுதல், மற்றும் முகவர்களுக்கு மீண்டும் பணத்தை செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் முறையான அனுமதியில்லாமல் உதவி பொது முகாமையாளரினாலேயே (நிதி) மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில்	லொத்தர்கள் அவற்றை வினியோகிக்கும் முகவர்களுக்கு புகையிரதம் அல்லது பஸ் வண்டிகளை பயன்படுத்திக் கொண்டே அனுப்பப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இத்தகைய லொத்தர்கள் புகையிரதத்தில் அல்லது பஸ் வண்டிகளில் காணாமல் போகும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அத்தகைய டிக்கட்டுகள் சம்பந்தப்பட்ட வினியோகிக்கும் விற்பனை முகவர்கள் விற்பனை செய்ததாக கருவி அவர்களின் பெயர்களில் பரிமாற்றங்கள் குறிப்பிடப்படுகின்றன. பின்னர் மேற்படி வினியோகிக்கும் விற்பனை முகவர்களுக்கு கிடைத்ததாக அவர்கள் ஊடாக எழுத்து மூலமாக உறுதி செய்து கொண்ட பின்னர் அப்பணத்தொகை மீண்டும் வினியோகிக்கும் விற்பனை முகவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் மேற்படி செயல்முறை தொடர்பாக கணக்காய்வு பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் வினியோக விற்பனை முகவர்களுக்கு அனுப்பப்பட்ட திகதிக்கு அடுத்த திகதியில் அத்தகைய டிக்கட்டுகள் காணாமல் போயுள்ளதாக விநியோக விற்பனை முகவர் களினால் உறுதி செய்து கொள்ளப்பட்ட பின்னர்

அவ்வாறான 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் விற்பனை பெறுமதி ரூ.307,861 ஆக அமைந்தது.	அந்த டிக்கெட்டுகள் விற்பனையாக கணக்கு வைக்கப்படுவதில்லை. அதற்கமைவாக இவ்வாறானதொரு பிரச்சினை எதிர்காலத்தில் ஏற்படாது.
(ஆ) மீளாய்வாண்டில் அச்சகங்களில் இருந்து மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை 31,779,000 இருந்ததுடன் களஞ்சியசாலையிலிருந்து விடுவிக்கப்படாமல் மீதமிருந்த சீட்டுகளின் எண்ணிக்கை 1,255,570 ஆகும். மேலதிகமாக கோரப்பட்ட சீட்டுகளின் வீதமாக நோக்குகையில் இந்த எண்ணிக்கை நூற்றுக்கு 4 வீதமாக இருந்ததுடன் அத கோடிபதி லொத்தர் சீட்டுகளில் இந்த வீதம் நூற்றுக்கு 6 வீதமான உயர்ந்த அளவினை கொண்டிருந்தது. சீட்டுகளுக்கான அனுப்பற் கட்டளை முன்வைக்கும் நடவடிக்கை உரிய முகாமைத்துவத்துடன் கூடியதாக இடம்பெறுவதில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2020 ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சம்பவங்கள் காரணமாக அதாவது நாட்டில் தோன்றிய covid-19 தொற்று நிலை அவ்வப்போது அதிகரித்தல் மற்றும் அதற்கு அமைவாக அரசாங்கம் நாட்டை முடக்குதல் மற்றும் விரிக்கப்பட்ட சிற்சில கட்டுப்பாட்டு மூலோபாயங்கள் காரணமாக விற்பனை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்ததுடன் நிறுவனத்தில் விற்பனையாகாமல் எஞ்சியிருந்த லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கையும் பெரும் அளவில் காணப்பட்டன. இதற்கமைவாக இந்த காலகட்டத்தில் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றது.
(இ) 2018 ஆம் ஆண்டில் ரூ.5,565,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Rear body அற்ற Double Wheel க்ரூ கெப் வண்டியை விற்பனைப் பிரச்சார வாகனமாக மாற்றியமைப்பதற்கு 2018 அக்டோபர் 18ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2020 டிசம்பர் 30-ஆம் தேதியில் 2 வருட காலத்தையும் விட அதிகமான காலம் கடந்து இருந்தாலும் சபை எதிர்ப்பார்த்த குறிக்கோள் அடையப்படவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6 பிரிவின் ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாமல் அளவு முறைகள் தயாரிக்கப்பட்டு விலைமனு கோரப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்த நிறுவனத்தின் அனுமதியின்றி நவீனமயப்படுத்த பட்டிருந்தது. மேலும், இந்த பணிக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் ஒரு வருட உத்தரவாத காலம் முடிவடைதல், சொத்துக்கள் மற்றும் அதன் உதிரி பாகங்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை, மற்றும் செயல் நிறைவேற்று பினைப் பொறுப்பின் செல்லுபடியாகும் காலம் கடந்து இருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் ரூ.11,991,900 செலவு உறப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இந்த தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சிக்கல்மிக்கதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இந்த வண்டியின் வேலைகளை நிறைவு செய்து தற்போது சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த வண்டியை பயன்படுத்தி எதிர்காலத்தில் விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும் தற்போது நாட்டில் நிலவும் covid-19 தொற்று நிலை காரணமாக இக்காலகட்டத்தில் அனைத்து மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. நாட்டின் நிலைமை வழமைக்கு திரும்பிய பின்னர் மேற்படி விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
(ஈ) சபையின் பிரதானமானதொரு தொழிற்பாடாக அமையும் லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பணி 2017 ஆம் ஆண்டு முதல் ஒரு முறை சார்ந்த பெறுகைகள் திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நடைமுறையில் உள்ள ஒப்பந்த காலம் நிறைவடைவதற்கு நெருங்கிய பின்னர் பெறுகைகள் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. பொதுவாக சுமார் ஆறு மாதங்கள் பெறுகை செயன்முறை இடம்பெறுவதுடன் இதன் காரணமாக நடைமுறையில் உள்ள ஒப்பந்த காமும் 06 மாதம் முதல் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் இற்றைவரை இரண்டு அச்சு நிறுவனங்கள் மாத்திரம் இதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.	இதற்கமைவாக திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் இதற்கான கேள்வி விலை கோரப்பட்டதுடன் இந்தக் கேள்வி விலைகள் 2020.08.04 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. ஆயினும் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் ஒரு தொழில்நுட்ப விடயம் காரணமாக மேற்படி கேள்வி விலையை கோரும் நடவடிக்கையை இரத்து செய்து அதற்கு அமைச்சின் பெறுகைகள் குழுவினால் மீண்டும் கேள்வி விலை கோரப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தற்போது இதற்கென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழு (SCAPL) கேள்வி விலை கோருவதற்கான கேள்வி விலை ஆவணத் தொகுதியை தயாரித்துள்ளதென அறிவிக்க விரும்புகின்றேன். இதற்கமைவாக அக்டோபர் மாதத்தின் முதற்பகுதியில் இதற்கான கேள்வி விலையை கோருவதற்கான வாய்ப்பு உள்ளதென அறிவிக்கின்றேன்.

2.3 பிற கணக்காய்வு அவதானிப்புகள்	
(அ) ஒரு முறைசார்ந்த திட்டம் இல்லாமல் மேம்படுத்தல் பொருள் வகைகள் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூ.3,623,367 பெறுமதியான மேம்படுத்தல் பொருள் வகைகள் குடை (ஆண்), டீ சர்ட், சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், தொப்பிகள், போசிலேன் செட்ஸ், நீர் வடிகட்டிகள் போன்றவை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபையின் மேம்படுத்தல் பொருட்களுக்கான அனுப்பற் கட்டளைகளை மீண்டும் முன்வைத்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப் படுவதாக அவதானிக்கப்படவில்லை.	இந்த உருப்படி ஒரு திட்டத்துக்கு அமைவாகவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் சந்தையில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உடனடி லொத்தர் சீட்டுகளில் அரசியலுக்காக உள்ளடக்கப்பட்டிருந்த உருப்படியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ஒரு போட்டி வகைக்கு (ஒரு உடனடி லொத்தர் சீட்டு வகைக்கு) இந்த உருப்படிகள் 5000 ஈடுபடுத்தப்பட்டதுடன் லொத்தர் சீட்டினை சந்தைக்கு விடுவிப்பதற்கு முன்னர் அந்த உருப்படி சபையின் களஞ்சியசாலையில் இருக்க வேண்டும் என்பதால் ஏற்கனவே கோரப்பட்டு களஞ்சிய சாலைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இந்த உருப்படிகள் அனைத்தும் பரிசுப் பொருட்களாக சந்தைக்கு விடுவிக்கப்பட்டதுடன் அந்த லொத்தர் சீட்டு வெற்றிகளில் பரிசுக்காக முன் வைக்கப்படாத ஒரு குறிப்பிட்ட அளவு பரிசுப் பொருட்கள் எஞ்சியுள்ளன. பரிசுப் பொருட்களாக பெற்றுக்கொள்ளப்பட்ட உருப்படிகள் லொத்தர் சீட்டின் பரிசு வீதத்தில் அடங்கியிருந்தாகும். மேலும் இதற்கு மேலதிகமாக நாங்கள் உடனடி லொத்தர் சீட்டுகள் மற்றும் விசேட லொத்தர் சீட்டுகளை மேம்படுத்தும் பணிக்கு விற்பனை உதவியாளர்களுக்கு பரிசாக வழங்குவதற்கு பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்ததுடன் அவற்றில் சில களஞ்சியசாலையில் எஞ்சியிருந்ததற்கான காரணம் கடந்த வருடம் முதல் நிலவிய கொவிட் தொற்று நிலைமையினால் மேம்படுத்தல் நடவடிக்கைகள் எதுவும் செய்யமுடியாமல் போனதால் ஆகும்.
(ஆ) 2019 அக்டோபர் 24ஆம் தேதி லொத்தர் சீட்டுகளின் பரிசு முறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நடைபெற்ற கூட்டத்தின்போது களஞ்சியசாலையில் இருக்கும், வெற்றி பெற்றவர்களினால் கோரப்படாத ஆறு மாதங்கள் கடந்த பரிசுகளை எதிர்வரும் போட்டிகளில் பயன்படுத்திக் கொள்வதற்கு சபை தீர்மானித்திருந்தது. இதற்கமைவாக, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.529,850 பெருமதியான 02 மோட்டார் சைக்கிள்கள் 2019 டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி லொத்தர் சீட்டிழுப்பின் பரிசாகவும் 2020 பெப்ரவரி லக்கின அதிர்ட்டம் விசேட சீட்டிழுப்பு பரிசாகவும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதி பொது முகாமையாளருக்கு (சந்தைப்படுத்தல்) ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் மேற்படி இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கணக்காய்வு செய்யப்பட்ட 2019 பெப்ரவரி 12ஆம் திகதியும் களஞ்சியசாலையில் இருப்பதை பௌதீக ரீதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.	அதில் ஒரு உருப்படி அதாவது Honda CD 11 ரக மோட்டார் சைக்கிள் லக்கின அதிர்ட்டம் விசேட லொத்தர் சீட்டுக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன் உடனடி லொத்தர் சீட்டுக்கு பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட உருப்படி 2020 ஆரம்ப காலத்தில் உடனடி லொத்தர் சீட்டுக்கு ஈடுபடுத்தினாலும் கொவிட் தொற்று காரணமாக அந்த லொத்தர் சீட்டுக்களை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் இந்த உருப்படியை மீண்டும் அந்த மேம்படுத்தல் பணிக்கு ஈடுபடுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
(ஈ) பயன்படுத்தப்படாமல் தக்க வைக்கப்பட்டிருந்த ரூ.592,500 பெறுமதியுடைய 123 பரிசு வவுச்சர்களும் 12 வருட காலமாக சபையினால் பயன்படுத்தப்படாமல் தக்கவைத்துக் கொள்ளப் பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவற்றில் ரூ.7500 பெறுமதியுடைய 07 வவுச்சர்கள் 2019 ஆகஸ்ட் 31ஆம் திகதி காலாவதியாகி இருந்தன. மேலும், ரூ.585,000 பெறுமதியுடைய ரூ.5000 117 வவுச்சர்கள் காணப்பட்டதுடன், இந்த வவுச்சர்களின் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை எனினும் அவை	இங்கு குறிப்பிடப்படும் பெறுமதியினை கொண்ட வவுச்சர்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கு வர்த்தக அமைச்சின் செயலாளரின் தலைமையில் சதொச நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் அக் கலந்துரையாடலில் சதொச நிறுவனத்திடம் சம்பந்தப்பட்ட தகவல்கள் இல்லாதிருந்ததால் அதற்கு ஏதுவான அனைத்து தகவல்களும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்டது. அதற்கமைவாக வர்த்தக

2009 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட வவுச்சர்களாக இருந்ததால் 12 வருடங்கள் கடந்திருந்தன. ஆகவே, எதிர்கால பரிசு வழங்கும் நடவடிக்கைகளில் இந்த வவுச்சர்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு நிச்சயமற்ற தன்மை உடையதாகவே இருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	அமைச்சு சதொச நிறுவனத்திற்கு எழுத்தில் அறிவித்துள்ளது யாதெனில் மேற்படி பணத்தொகையை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். எதிர்வரும் காலத்தில் அது சபைக்கு கிடைக்கவிருக்கிறது
(ஈ) 2020 ஜனவரி மாதம் 30ஆம் தேதி பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக சூப்பர் போல் விசேட சீட்டிழுப்புக்கான ஸ்கூட்டிகளை வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்ட கேட்புவிலை முன்வைத்தவர்களுக்கு அன்றைய தினமே பொருட்களை அனுப்புவதற்கான கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும், பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.7.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான விலைக் கேள்வியின் செல்லுபடியாகும் காலத்துக்குள்ளேயே ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு உடனேயே ஏற்றுக்கொள்ளுதல் கடிதம் வழங்குனருக்கு வழங்கப்படவில்லை. பெறுகை வழிகாட்டு நெறிகள்.4.10 பிரகாரம் செயல் நிறைவேற்று பினைப் பொறுப்பினை சமர்ப்பிப்பதற்கும் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பரிசாக வழங்குவதற்கு மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்யும் போது அவற்றை ஒரே தடவையில் கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துதல் குறைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து பரிசு களுக்கும் வெற்றியாளர்கள் முன்வராத காரணத்தினால் மீதமாகின்ற மோட்டார் சைக்கிள்களை களஞ்சியப் படுத்தும்போது அவற்றின் பகுதிகள் துருப்பிடித்தல், பழைய மொடலாக மாற்றமடைதல், உற்பத்தி வருடம் பழைய தாக மாறுதல், பௌதீக நட்டம் ஏற்படுதல் போன்றவை இடம்பெறுகின்றது. ஆகவே அனைத்து மோட்டார் சைக்கிள்களும் ஒரே தடவையில் கொள்வனவு செய்யப்படுவதில்லை. வெற்றியாளர்கள் முன்வரும் முறைக்கு அமைவாக தேவையான மோட்டார்சைக்கிள்களை மாத்திரம் தனித்தனியாக பெற்றுக் கொள்வதுடன் சாதாரண வேறு பெறுகைகளைப் போலவே ஒரே தடவையில் கேள்வி விலை கோரப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதல் மேற்படி விடயங்கள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கின்றேன். ஒரே தடவையில் அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கும் கேள்வி விலை கோரப்பட்டால் அந்த மொத்த அளவையும் கொள்வனவு செய்வதற்கு சபை ஒப்பந்தத்துக்கு உட்பட வேண்டுமென்பதால் இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன
(உ) சபை 3,275,246 செலவினை மேற்கொண்டு Sweep App ஊடாக லொத்தர் டிக்கெட்டுகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருந்தாலும் ஒரு தனியார் நிறுவனத்தினால் அச்சிடப்பட்ட லொத்தர் டிக்கெட்டுகளை அந்த வசதிகளின் ஊடாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. மேலும், அச்சு இயந்திரங்கள் எதுவும் இல்லாமை மற்றும் அச்சு தவறுகளுடன் கூடியதாக தொடர்ச்சியாக லொத்தர் டிக்கெட்டுகளை அச்சிட்டு இருத்தல் ஆகிய குறைபாடுகள் இருந்தும் அந்த நிறுவனத்தை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நிறுவனமாக ஏற்றுக்கொள்ளுதல் கணக்காய்வின் போது கேள்விக்குரிய விடயமாக அமைந்தது.	Sweep app. செயலிக்கு லொத்தர் சீட்டுகளை விநியோகிக்கும் போது அதற்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கையை திட்டவட்டமாக காட்டாமை மற்றும் அந்த டிஜிட்டல் லொத்தர் சீட்டுகளுக்கு மேலதிக காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதால் இந்த காப்புறுதி கிரயம் உயர்ந்த பெறுமானத்தை கொள்வதால் Oracle International நிறுவனத்தினால் மேற்படி டிஜிட்டல் லொத்தர் சீட்டுகளை வழங்கவில்லை. எவ்வாறாயினும் Oracle கம்பெனி ஏற்கனவே சபையின் லொத்தர் சீட்டு வழங்குனராக இருப்பதாலும் அத்துடன் கம்பெனி வெற்றிகரமான ஒரு வழங்குனராக குறிப்பிட முடியாத அளவிற்கு வழங்கலில் பலவீனமான நிலையில் இல்லாததால் தொழில்நுட்ப குழுவினால் Oracle கம்பெனி வெற்றிகரமானதொரு விலைக் கேள்வியாளர் அடையாளம் காணப்பட்டுள்ளது.
(ஊ) பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை லொத்தர் சீட்டு அச்சிடுதலின் போது சபைக்கு செலவிட நேர்ந்த மொத்த மேலதிக செலவு ரூ.72,479,000 ஆகும்.	பெறுகை வழிகாட்டலுக்கு அமைவாக ஏதேனும் பெறுகைக்கு ஏதுவான பரிந்துரைகளை முன் வைத்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே அக்குழுவின் விதப்புரை களுக்கு அமைவாக கேள்வி விலை வழங்கப்படுவதால் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு மேலதிக செலவினை மேற்கொள்ளும் நிலை ஏற்படவில்லை.

	எதிர்காலத்தில் இந்த மோட்டார் சைக்கிள்கள் ஒழுங்கு முறையான விற்றொழித்தல் செயன்முறையின் கீழ் அகற்றப்படும்.
(எ) விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் பயன்படுத்திய ரூ.1,352,610.58 கிரயம் கொண்ட 07 மோட்டார் சைக்கிள்கள் 02 மாதம் 11 மாதத்திற்கு அதிகமான காலம் அலுவலக வளவில் வாகன தரிப்பிடத்தில் பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த	சபைக்கு சொந்தமாக இருந்த ஆயினும் அகற்றப்பட்ட சில மோட்டார் வண்டிகள் ஒழுங்கு முறையான கேள்விப் பத்திர நடைமுறை ஊடாக வெளி வாரியான நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த மோட்டார் வண்டிகளை கொள்வனவு செய்யும் தரப்புகளினால் அதனை தங்களுடைய பெயரில் மாற்றிக் கொள்ளாத நிலைமையின் காரணமாக இந்நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஒரு காலத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இருந்து ஒரு அறிக்கையை பெற்றுக்கொண்ட பின்னர் இது தொடர்பாக ஆராய்ந்து அகற்றும் செயன்முறை ஊடாக கேள்விப் பத்திர முறையில் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளை கொள்வனவு செய்த தரப்புகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்
(ஏ) சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் மோட்டார் வண்டிகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 37 வாகனங்கள் சபையின் நிலையான சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	
(ஐ) 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியை நோக்குமிடத்து கொவிட் தொற்று பரவியதன் காரணமாக சபையின் விற்பனை வருமானம் 2018 ஆம் ஆண்டின் அக்கால பகுதியுடன் ஒப்பிடும்போது ரூ. 3,124,722,840 தொகை அல்லது நூற்றுக்கு 45 வீதம் வீழ்ச்சி அடைந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.	இவ்விடயத்தில் இந்த விற்பனை வீழ்ச்சியினை குறைத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாக சபையினால் சந்தைக்கு வெளியிடப்பட்ட லொத்தர் டிக்கெட்டுகளின் சீட்டிழுப்பு திகதியை மாற்றுதல், சனிதா, சூப்பர் போல் லொத்தர் சீட்டுகளின் தினசரி சீட்டிழுப்பு, சசிறி எனும் பெயரில் ஒரு புதிய லொத்தரை அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டன. டிஜிட்டல் லொத்தர் சீட்டாக DLB Sweep App செயலியை அறிமுகப்படுத்துதல் மற்றும் SMS லொத்தர் டிக்கெட்டுகளை அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இந்த தொற்று நிலையில் சபைக்கு பாரிய சவாலாக நாடளாவிய ரீதியில் லொத்தர் டிக்கெட்டுகளை விநியோகித்தல் பாரிய சவாலாக இருந்தது. இதற்கான மாற்று வழி முறையாக சபைக்கு சொந்தமான வாகனங்களில் நாடளாவிய ரீதியில் டிக்கெட்டுகளை வினியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் ஏற்பட்ட இரண்டாவது கொரோனா நிலையின் மத்தியிலும் அந்தந்த நிலைகளுக்கு ஏற்றவகையில் விற்பனையை கணிசமான அளவு மட்டத்தில் பேணுவதற்கு சபைக்கு ஆற்றல் கிட்டியது.
(ஒ) பரிசுப்பொருள் வகைகளில் கொள்வனவு செய்து 02 வருடங்கள் கடந்துள்ள ரூ.548,224 பெறுமதியான 08 செல்லிடத் தொலைபேசிகள் 04 டெப் கணினிகள் ஆகியவை 04 வருட உத்தரவாத காலத்தை கடந்திருந்ததுடன் ரூ.32,510 பெறுமதியான 02 மவுண்டன் சைக்கிள்கள் மற்றும் பலகையிலான தொலைக்காட்சிப் பெட்டியை வைப்பதற்கான சட்டம் ஆகியவை பயன்படுத்த முடியாத வகையில் இருக்கின்றதென பௌதீக சோதனையின்போது அவதானிக்கப்பட்டது. இதில், 03 தொலைபேசிகள், 04 டெப் கணினிகள், 02 மவுண்டன் சைக்கிள்கள் 2019 ஆம் ஆண்டின் பண்ட ஆய்வு மதிப்பீட்டின் போது விற்பனைக்கு இனங்காணப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியாகிய 2021 பெப்ரவரி 12ஆம் தேதியாகின்ற போதும் அப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	இந்த உருப்படியை எதிர்காலத்தில் ஏல விற்பனையில் விடுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் (பணிப்பாளர் சபை நிருபம் இலக்கம் (2021/04/1792) பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஓ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் களஞ்சியசாலையில் இருந்த பயன்படுத்தப்படாத, ஆயினும், பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் இருந்த ரூ.505,407 பெறுமதியுடைய 10 மேம்படுத்தல் பொருள் வகைகளைச் சேர்ந்த 119 பொருட்களை ஏல விற்பனைக்கு விடுவதற்கு கட்டுப்பாட்டு பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் ரூ.325,569 பெறுமதியுடைய 07 வகைகளுக்கு ஏதுவான 76 பொருட்களை ஏல விற்பனையில் விற்பனை செய்து 2020ஆம் ஆண்டில் ரூ.38,954 தொகை ஈட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக பயன்படுத்தப்படாத மேம்படுத்தல் பொருள் வகைகள் காரணமாக ரூ.286,615 அதாவது நூற்றுக்கு 88 வீதமான நட்டம் சபைக்கு ஏற்பட்டதென அவதானிக்கப்பட்டது.	2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த உருப்படிகள் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் களஞ்சியசாலையில் இருந்ததால் அந்த உருப்படிகளை கொள்வனவு செய்த விலைக்கு ஏல விற்பனையில் இடுவதற்கு இயலாது. அதற்கான காரணமாக சந்தையின் பெறுமதியை குறைவடைவதல், தரம் குறைவடைதல் மற்றும் காலம் கடந்துள்ளமை போன்றவற்றை கூறலாம். ஆகவே இவ்வாறான உருப்படிகளை ஏல விற்பனையில் விடுவதன் நோக்கம் பயன்படுத்த முடியாத உருப்படிகளை ஏல விற்பனை செய்து நிறுவனத்துக்கு ஏற்படும் நட்டத்தை குறைத்துக் கொள்வதாகும். ஆகவே நீங்கள் தெரிவித்துள்ள ரூ.286,615/- தொகை நட்டம் ஏற்பட்டுள்ளது.
(ஔ) சபை 1990 ஆம் ஆண்டு வோர்ட் பிளேசில் ஒரு நபருடன் ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்நபருக்கு வழங்கியிருந்த ரூ.2,520,000 கட்டிட வாடகை வைப்புத்தொகையை மீண்டும் அறவிட்டுத் தருமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடுத்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆம் தேதி கிடைத்ததுடன் அதன் பிரகாரம் பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டு இருந்தாலும் அத் தீர்ப்பு கிடைத்து சுமார் 05 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அப் பணத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	1990 ஆம் ஆண்டில் வோட் பிளேசில் ஒரு நபருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை ஒப்பந்தத்திற்கு அமைவாக சபைக்கு கிடைக்கவேண்டிய ரூ.25,20,000 பணத் தொகையினை அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வழக்கு தொடரப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தினால் வழக்கின் முன்னேற்றம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக நீதிமன்றத்தினால் சம்பந்தப்பட்ட தரப்புக்கு இந்த பணத்தொகையை வழங்குமாறு ஏற்கனவே கேட்பு தொகை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
(க) 2013ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் ரூ.2,877,144 மற்றும் 2014ஆம் ஆண்டில் ரூ.749,583 என மொத்தமாக ரூ.3,626,727 பணத் தொகை ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஆலோசனை கட்டணத்தின் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. 7 - 8 வருட காலம் ஒரு வெளித் தரப்பின் வசம் வைக்கப்பட்டிருந்த இப்பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.	2014 ஆம் ஆண்டில் Archtype நிறுவனத்திற்கு கட்டிடங்களை நவீனமயப்படுத்துவதற்கு தேவையான திட்டங்களை தயாரிப்பதற்கும் ஏனைய கட்டிடவியலுக்காகவும் ரூ.36,26,727/- முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஆயினும், படுத்தல் பணிகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது. இந்த பெறுகைகளுக்கு ஏதுவான கோப்புகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தங்கள் வசம் கொண்டுவந்து புலனாய்வினை மேற்கொள்கின்றது.
(ங) 2020 டிசம்பர் 31-ஆம் திகதி சபைக்கு சொந்தமான மொத்தம் ரூ.270,749,417 பணத் தொகை உடனடி வைப்புக் கணக்கில் வைப்பீடு செய்யப்படாமல் 06 நடைமுறை கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.	இந்தப் பணம் பரிசில்களை செலுத்துவதற்காக சேரும் பணத் தொகையாக இருப்பதுடன் இந்த பணத் தொகையை எங்கள் நடைமுறை கணக்குகளில் தக்க வைத்துக் கொள்ளாமல் ஏழு நாட்களில் கோரும்போது கிடைக்கும் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஏழு நாள் அழைப்பு பணம் கணக்கில் பணத்தை தக்க வைத்துக் கொள்வதன் மூலம் சபைக்கு மேலதிக வருமானம் கிடைக்கின்றது. மேலும் இந்தப் பணத் தொகை சபையின் தேவைக்கு ஏற்றவாறும் எச்சந்தர்ப்பத்தில் எத்தனை வெற்றியாளர்கள் முன் வருகின்றார்கள் எனும் விடயம் எமக்குத் தெரியாததால் அப்பணத்தை குறைந்தபட்சம் குறுங்கால முதலீடாக கூட தக்கவைத்துக் கொள்ளாமல் மேற்படி முறையில் ஏழுநாள் அழைப்புக் கணக்கில் வைக்கப்படுகின்றது

விரிவான வருமானக் கூற்று

டிசெம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது		2020	2019
		ரூ.	ரூ.
வருவாய்	01	**15,033,029,360**	17,065,414,012
லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம்	02	**451,308,013**	460,097,151
பரிசுகளுக்கான செலவினம்	03	**7,702,515,219**	8,903,494,383
சீட்டிழுப்பு கிரயம்	04	**509,983,411**	584,074,507
மொத்த இலாபம்		**6,369,222,716**	7,117,747,971
ஏனைய வருமானம்	05	**158,323,671**	193,820,035
விநியோக கிரயம்	06	**3,357,266,425**	4,219,036,579
நிர்வாக செலவுகள்	07	**506,926,732**	541,799,568
தொழிற்படுத்தல் செலவுகளுக்கு பினனரான மிகை		**2,663,353,230**	2,550,731,860
நிதிக் கிரயம்	08	**382,172**	438,396
பரிசுகளை செலுத்தித் தீர்த்தல்		**330,530,580**	346,837,460
வரிக்கு முன்னரான இலாபம்		**2,993,501,638**	2,897,130,924
வருமான வரி	09	**10,921,555**	235,073,385
வருமான வரிக்கு பின்னரான இலாபம்	10	**2,982,580,083**	2,662,057,539
பிற விரிவான வருமானம்			
ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் / நட்டம்	17.1	**(3,139,116)**	6,735,128
மீள்மதிப்பீட்டு மிகை		**39,213,944**	
ஆண்டுகான மொத்த விரிவான வருமானம்		**3,018,654,911**	2,668,792,667

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

W.A.V.C .சோமரத்ன
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

அமித் கே.கமகே
தலைவர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர

திருமதி. ஜெனட் ஜயவர்தன
பணிப்பாளர்

நிதி நிலைக்கூற்று

டிசெம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது		2020 ரூ.	2019 ரூ.
சொதுக்கள்			
நடைமுறையல்லா சொததுக்கள்	11		
ஆதனங்கள், இயந்திரசாதனங்கள்,உபகரணங்கள்		**1,192,868,608**	1,221,373,015
நடைமுறையிலுள்ள முலதன வேலைகள்		**37,729,237**	14,665,947
சொத்து	11	**6,051,604**	9,549,182
		1,236,649,449	1,245,588,144
பணியாளர் நலன்சார்ந்த சொத்துக்கள்	17		7,038,067
மொத்த நடைமுறையல்லாச சொத்துக்கள்		**1,236,649,449**	1,252,626,211
நடைமுறை பொறுப்புகள்			
சரக்குத் தொக்குகள்	13	**32,590,632**	51,026,204
வணிக மற்றும் ஏனைய சென்மதிகள்	14	**92,541,218**	126,012,880
முற்கொடுப்பனவு மற்றும் வைப்புகள்	15	**8,197,378**	5,212,271
நிலையான வைப்புகள்	12	**1,338,731,761**	1,451,307,572
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	16	**541,662,763**	795,666,048
மொத்த நடைமுறை சொததுக்கள்		**2,013,723,752**	2,429,224,975
மொத்த சொத்துக்கள்		**3,250,373,201**	3,681,851,186
உரிமைபபங்குகள் மற்றும் பொறுப்புகள்			
பங்களிப்பு மூலதனம்			
சனாதிபதி நிதியம்		**2,200,000**	2,200,000
மகாபொல நம்பிக்கை நிதியம்		**2,200,000**	2,200,000
பரிசு ஒதுக்கக் கணக்கு		**698,558,607**	1,103,197,285
செலுத்தப்படவேண்டிய சனாதிபதி நிதியம்		**685,860,083**	477,792,667
மீள்மதிப்பீடு மிகை		**614,729,237**	575,515,293
ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் / நட்டம்		**(3,139,116)**	
மொத்த உரிமைப் பங்கு		**2,000,408,811**	2,160,905,245
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
ஊழியர் நலன்சார் பொறுப்புகள்	17	**3,636,437**	
செலுத்தப்பட வேண்டிய முகவர் மற்றும் விநியோகத்தர் வைப்புகள்	18	**36,390,381**	36,110,381
மொத்த நடைமுறையல்லா பொறுபபுகள்		**40,026,818**	36,110,381
நடைமுறை பொறுப்புகள்			
வணிக மற்றும் ஏனைய சென்மதிகள்	19	**516,032,675**	563,493,496
சென்மதியான பரிசுகள்	20	**578,618,857**	760,794,203
சென்மதியான கடன் வவுச்சார்கள்		**115,286,040**	160,547,860
மொதத நடைமுறை பொறுப்புகள்		**1,209,937,573**	1,484,835,560
மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்		**3,250,373,201**	3,681,851,186

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

W.A.V.C .சோமரத்ன
